புதுவரவு | செய்திப்பக்கம் | இணையவெளி | கணினி விளையாட்டு | கணினி மென்பொருள் | கணினி வன்பொருள் | கணினிக் கல்லூரி என இன்னும் பல


தமிழ்

# PC TIMES

மார்ச் - 2007 • MARCH - 2007

மலர் - 02 • இதழ் - 01


**WIN!**
Pen Drives
Free Subscriptions

கணினிக் கல்லூரி



இணைக்கப்பட்டுள்ளது

- Photoshop
- JAVA
- HTML
- Ms Word
- Ms Excel
- GIT
- Help Desk

## Microsoft®
## புதிய வெளியீடுகள்

Windows Vista™

Microsoft® Office



இலங்கையின் ஒரேயொரு மாதாந்த தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை


பீசி ரைம்ஸ் பீசி டைம்ஸ்
ISSUE 01 Rs. 30/-
9 771391 502008



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவரவுகள்
# New Arrivals

தொகுப்பு : CZ



## GRETA

தொலை தொடர்பில் இன்னொரு கூறாக தொலை நகல் விளங்குகிறது. தொலை நகலை அனுப்புவதற்கு தொலைநகல் இயந்திரம் இருக்கவேண்டியது அவசியமாகும். தொலைநகலை மிக விரைவாக அனுப்புவதற்கும், பெறுவதற்கும் பொருத்தமான வகையில் GRETA எனும் தொலைநகல் இயந்திரம் (Fax Machine) உருவாக்கப்பட்டுள்ளது. 11.4 x 5.9 x 2 அங்குல பரிமாணத்தில் காணப்படும் இச்சாதனம், மிகவும் அழகிய தோற்றத்தில் காணப்படுகிறது. இதனூடாக கடதாசிகள் மிக எளிமையாக அச்சிடப்பட்டு வெளியேறுமென சொல்லப்படுகிறது. இதன் விலை பற்றி இன்னும் எதுவும் சொல்லப்படவில்லை.

## LIMIX RS1

Matsushita Electric Industrial நிறுவனம், புதிதாக மிக துல்லியமான நிழற்படங்களை பிடிக்கக்கூடிய வகையிலமைந்த டிஜிடல் கமராவை அறிமுகம் செய்துள்ளது. LIMIX FS1 என இனங்காணப்படும் இந்தக் கமராவானது 6.37 மெகா பிக்ஸல் அளவுடையதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு CCD Image Sensor ஐயும் தன்னகம் கொண்டு அமையப் பெற்றுள்ளது. இந்தக் கமரா மூலம் பிடிக்கப்படும் நிழற்படங்களின் Pixel மிக தெளிவாக அமையுமென தயாரிப்பு நிறுவனம் கூறுகிறது. இதன் விலை, 250 அமெரிக்க டொலர்களாகும்.




## QWERTY BLACK BERRY




புதிய கண்டுபிடிப்புகளின் வரவுகளில் குறைவே இருப்பதில்லை. தொழில்நுட்ப மாற்றங்களின் அடைவுகளை தன்னகம் கொண்ட வகையில் நாளாந்தம் புத்தம் புதிய சாதனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த வரிசையில் இப்போது 0.55 அங்குலம் மட்டும் தடிப்புடையதாக அமைந்த Black Berry அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. நினைவகக் கூறினைத் தாங்க MicroSD slot, தரவுகளை பரிமாற Blutooth 2.0, காட்சிகளை உயர் தரத்தில் கண்டு கொள்வதற்கு QVGA display, காட்சித் திரைகளுக்குள் மாறிக் கொள்ள Scroll ball என இப்புதிய Black Berry இன் சிறப்பம்சங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனாலும் இதன் Keyboard ஆனது, பொருத்தமற்ற முறையில் உருவாக் கப்பட்டுள்ளதாக விமர்சனங்களும் எழுந்துள்ளன. இதன் அறிமுக விலை இதுவரை அறிவிக்கப்படவில்லை. இருந்தாலும் கையடக்கமாக உலகை கொண்டுவரும் சாதனமாக இது அமையப் போவது உறுதியே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




















தமிழ் PC TIMES

தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை

MARCH 2007 • VOLUME 02 • ISSUE 01


உள்ளடக்கம்


02 புதுவரவுகள்

04 ஆசிரியர் தலையங்கம்

05 செய்திப் பக்கம்

Microsoft இன் புதிய வெளியீடுகள்

06 Windows Vista

07 பிரத்தியேக செவ்வி
- Country Manager Microsoft Sri Lanka

08 Microsoft Office 2007

10 பகிரப்படவுள்ள விளம்பர வருமானம்

27 Myth-II: Soulblighter

28 கணினியின் செயற்றிறனில் Motherboard

29 இனி அழைப்பிதழ் தேவையில்லை

29 எல்லையே இல்லை!

30 மனசு உடைஞ்சு போச்சு!

31 உருவாகிறது - கடுகதி கணினி

32 எம்மோடு நாமே பேசலாம்

33 விரிவடையும் கையடக்கச் சாத்தியங்கள்

34 வாசகர் திருமுகம்

35 இணைய வெளி





## கணினிக் கல்லூரி

கணினிப் பாட இணைப்பிதழ்


- Ms Word
- Ms Excel
- HTML
- Photoshop
- GIT
- Java
- Help Desk

11-26



PC TIMES

*No. 08, Hunupitiya Cross Road,*
*Colombo - 02, Sri Lanka*
*Tel : +94 11 2 479512*
*email : pctimes@wijeya.lk*

wijeya newspapers

**Printers & Publishers**
WIJEYA NEWSPAPERS LTD
*No. 08, Hunupitiya Cross Road,*
*Colombo - 02,*
*Sri Lanka*
*Tel : +94 11 2314714*

**Editor**
K.Rushangan
*editorpctimes@wijeya.lk*

**Sub Editor**
Tharique Azeez

**Layout Designer**
R.Vinothini

**Editorial Coordinator**
R.R. Jeyakeshan

**Assistant Manager**
**Supplements & IT Publishing**
Sunanda Karunaratna

**Production Manager**
Ashley Cooray

**Circulation Manager**
Rohan Fonseka

**Information Systems Manager**
Naveen Gunaratne

**Desktop Publishing Manager**
Chandana Dasanayke

**Advertising Sales Manager**
Saaranga Wijeratne

**Subscription Executive/Sales**
Ranjith Rupasinghe

**Brand Manager**
Sujith Pathirannehe


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் PCTIMES இன் சந்தாதாரராகுங்கள்!!

### உள்நாட்டு சந்தாக் கட்டணங்கள்

| காலம் | கொழும்பு நகர எல்லைக்குள் | உள்ளூர் தபால் |
|---|---|---|
| ஒரு வருடம் | 360.00 | 408.00 |
| ஆறு மாதம் | 180.00 | 204.00 |

### வெளிநாட்டு சந்தாக் கட்டணங்கள்

வெளிநாட்டு தபால்

| காலம் | "அ" வலயம் | "ஆ" வலயம் | "இ" வலயம் | "ஈ" வலயம் |
|---|---|---|---|---|
| ஒரு வருடம் | 900.00 | 1,104.00 | 1,212.00 | 1,548.00 |
| ஆறு மாதம் | 450.00 | 552.00 | 606.00 | 774.00 |

"அ" வலயம் :-
ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான்

"ஆ" வலயம் :-
ஈடென், பாஃரேன், பேர்மா, ப்றுணி, டுபாய், ஹொங்கொங், டோஹா, இந்தோனஷியா, ஈரான், ஈராக், குவைத், மலேசியா, ஓமான், சிங்கப்பூர், தாய்லாந்து, வியட்னாம், லாவோஸ், ஜோர்தான், டமார், தெஹ்ரான், றியாத்

"இ" வலயம் :-
ஓஸ்ரியா, அவுஸ்ரேலியா, பொட்ஸ்வானா, சீனா, சைப்ரஸ், டென்மார்க், எகிப்து, பிரான்ஸ், பூஜீ தீவு, கானா, கம்பியா, ஜேர்மனி, ஹோலன்ட், ஜப்பான், மலாவி, மதீரியா, மாலி, நியூசிலாந்து, நெதர்லாந்து, பப்புவா நியூ ஜீனியா, தென்னாபிரிக்கா, ஸ்வீடன், ஸ்பெய்ன், தெற்கு தாய்வான், ஐக்கிய இராச்சியம், சோவியத் ரஷ்யா, உகண்டா, சம்பியா. ரூமானியா, இத்தாலி, சிம்பாப்வே, பிலிப்பைன்ஸ்

"ஈ" வலயம் :-
கனடா, ஜீனியா, ஐக்கிய அமெரிக்கா, க்யூபா, பேர்முடா

காசுக்கட்டளையை அனுப்புவோர் பணம் செலுத்தும் தபால் அலுவலகமாக Slave Island எனக் குறிப்பிட்டு அனுப்பவும். காசோலைகளை அனுப்புவோர் WIJEYA NEWSPAPERS LTD. என்ற பெயருக்கு காசோலைகளை எழுதுதல் வேண்டும். காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகளை நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி

Circulation Manager,
Wijeya Newspapers Ltd.
No. 08, Hunupitiya Cross Road,
Colombo - 02,
Sri Lanka.
Tel : 2307789, 2 314714 Ext. 626,
Fax : 2459725, email : subs@wijeya.lk

### விளம்பரக் கட்டண விபரம்

| | முழுப்பக்கம் | ½ பக்கம் | ¼ பக்கம் | ⅛ பக்கம் |
|---|---|---|---|---|
| பின்னட்டை | 25,000.00 | - | - | - |
| பின் உள்ளட்டை (வர்ணம்) | 22,500.00 | - | - | - |
| முன் உள்ளட்டை | 20,000.00 | - | - | - |
| உள்பக்கம் (க/வெ) | 10,000.00 | 6,000.00 | 3,000.00 | 1,500.00 |
| உள்பக்கம் (க+1) | 12, 500.00 | 6,500.00 | 3,500.00 | 1,750.00 |
| உள்பக்கம் (க+2) | 15,5000.00 | 8,000.00 | 4,000.00 | 2,000.00 |
| உள்பக்கம் (வர்ணம்) | 17,500.00 | 9,000.00 | 4,500.00 | 2,500.00 |

விளம்பரத் தொடர்புகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

Advertising Manager,
Wijeya Newspapers Ltd.,
48, Parkway Building, Park Road,
Colombo - 02.

## நீங்கள் Netizen ஆ?

இலங்கைத் தமிழ் வாசகர்களின் தகவல் தொழில்நுட்ப சாளரமான PC Times இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்போது, Microsoft நிறுவனம் தனது சாதனைகளில் மற்றுமொரு படிநிலையான Windows Vista வை வெளியிட்டிருக்கிறது. இது ஒரு தற்செயல் நிகழ்வாக இருந்தாலும், தகவல் தொழில்நுட்பத் துறையின் உலகளாவிய வளர்ச்சிக்குச் சமாந்தரமாக உங்கள் PC Times இன் பயணம் அமைவது வாசகர்களாகிய உங்களுக்கும், எமக்கும் பெருமை சேர்க்கும் விடயம் தானே?

"தகவல் தொழில்நுட்பத் தொலைகாட்டி" என்று PC Times ஐ எமது வாசகர் ஒருவர் பெருமையுடன் வர்ணித்திருப்பதை நிரூபிக்கும் வகையில் (பார்க்க: வாசகர் திருமுகம், பக்.34), Windows Vista வின் வருகையையும், எதிர்பார்க்கப்பட்ட அதன் சிறப்பம்சங்கள் பலவற்றையும் முன்கூட்டியே உங்களுக்கு நாம் அறியத்தந்திருந்தோம். இந்த இதழ், Vista வினதும், Office 2007 இனதும் சிறப்பம்சங்கள் பலவற்றையும் விரிவாக உங்களுக்குத் தருகிறது.

கூடவே, Microsoft நிறுவனத்தின் இலங்கைக் கிளை முகாமையாளர் சிரியான் டி சில்வா விஜயரத்ன, PC Times வாசகர்களுக்காக எம்முடன் பகிர்ந்துகொண்ட கருத்துக்களையும் இந்த இதழ் தாங்கியிருக்கிறது.

Windows Vista உடன் தகவல் தொழில்நுட்பத்தின் பாய்ச்சல்கள் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதை நிரூபிப்பதுபோல, உலகின் பல்வேறு மூலைகளிலும், தகவல் தொழில்நுட்பம் புதிய, புதிய பரிமாணங்களை எடுத்துக்கொண்டே இருக்கிறது. கடுகதி மீகணினி, Crazy Talk, கையடக்கத் தொலைபேசியின் பெருகிவரும் சாத்தியங்கள் என இன்னும் பல விடயங்களையும் உங்கள் "தகவல் தொழில்நுட்பத் தொலைகாட்டி" இந்த இதழில் காட்சிப்படுத்துகிறது.

இவற்றில், Gmail க்கு இனி அழைப்பிதழ் தேவையில்லை என்ற தகவல் வாசகர்களுக்கும், இணையப் பயனர்களுக்கும் மகிழ்ச்சியேற்படுத்தக்கூடிய ஒரு விடயம். இணையப் பாவனையும், மின்னஞ்சல் பயன்பாடும் கையடக்கத் தொலைபேசிகளிலும் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்ட ஒரு காலப்பகுதியில், Google இன் இந்த அறிவிப்பு இனிப்பானதுதானே?

இணையத் தேடலில் Google பெற்றிருக்கும் சிறப்பிடம் காரணமாக, Google என்ற பதம் தேடல் என்ற சொல்லைக் குறிக்கும் வினைச்சொல் ஆனதுபோல, மக்கள் கூட்டத்தைக் குறிக்கும் Citizen என்ற பதம்போல், இணைய வலைப்பின்னல் பாவனையாளர்கள் Netizen என அழைக்கப்படுமளவுக்கு இணையப்பாவனை பெருகியிருக்கிறது.

நீங்கள் இந்த நாட்டின் Citizen,
நீங்கள் Netizen ஆகிவிட்டீர்களா?

\- ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IT NEWS HIGHLIGHTS

தொகுப்பு : உதய தாரகை

## OPEN SOURCE ஆகும் கியூபா



கியூபாவில் பல அரசாங்க நிலையங்களில் Open Source மென்பொருள்களை பாவிப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. நாளாந்தம் Open Source மென்பொருள்களை பாவிக்கும் கணினி பயனர்களின் எண்ணிக்கை கியூபாவில் அதிகரித்துவருவதோடு மக்கள் அவை பற்றி அறிவதற்கும் ஆவலாக இருக்கின்றார்கள். இருந்தபோதிலும், கியூபாவில் வேகமான இணைய இணைப்பு வசதிகள் இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். Open Source மென்பொருள்களை பாவிப்பதால் அரசாங்கச் செலவீனங்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. வெனிசியூலா, சீனா, பிரேசில் மற்றும் நோர்வே போன்ற நாடுகள் Open Source மென்பொருள்களைப் பாவிப்பதை பகுதியளவில் ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கியூபாவின் ஹவானா நகரில் அண்மையில் இடம்பெற்ற தகவல் தொழில்நுட்ப சர்வதேச மாநாட்டில் கலந்துகொண்ட பார்வையாளர் ஒருவர் இணையத்தைப் பயன்படுத்துவதையே படத்தில் காண்கிறீர்கள்.

## வரலாறு படைக்கும் ஹிலாரி




அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் பாரியார் ஹிலாரி கிளின்டன் முனைந்துள்ளார். மக்களிடையே தனது பிரச்சார நடவடிக்கைகளை இணையத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே அவர் அதிகமாக மேற்கொள்கிறார். இது மக்களிடையே நேரடியாக கதைப்பது போன்ற நிலையை உருவாக்கியுள்ளதாக புதிய தொழில்நுட்ப அடைவுகளைப் பற்றி ஹிலாரி வியக்கின்றார். இவரின் உத்தியோகபூர்வ இணையத்தளமூடாக பலரும் அவருடன் நேரடியாகவே நாளாந்தம் சம்பாஷணைகளில் ஈடுபடுகின்றனர். இணையமுகவரி hillaryclinton.com

## பாதுகாப்பான இணைய உலா




கடந்த பெப்ரவரி 06 ஆம் திகதி உலகளவில் 40 நாடுகளைச் சேர்ந்த நூறு அமைப்புக்கள் "பாதுகாப்பான இணைய தினத்தை" (Safer Internet Day) கொண்டாடியது. இந் நாளில் முக்கிய குறிக்கோளாக மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு இணையத்தில் பயன்களை எவ்வாறு பாதுகாப்பாக பெற்றுக்கொள்ளலாம் என்ற விழிப்புணர்வு வழங்கப்பட்டது. Brussels நகரில் அமைந்துள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகமாநாட்டில் கலந்துகொண்ட ஊடகம் மற்றும் தகவல் சமூகத்திற்கான ஐரோப்பிய ஒன்றிய ஆணையாளர் Viviane Reding அவர்கள் உரையாற்றுவதை படத்தில் காண்கிறீர்கள்.

## "Wow" என்பதற்கு நூறு காரணங்கள்



Microsoft நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி Steve Ballmer, புதிய வின்டோஸ் விஸ்டாவின் பண்புகளைக் கண்டு ஆச்சரியப்படுகிறார். விஸ்டாவை முதலில் காண்பவர்களின் வாயிலிருந்து 'Wow' என்பதைத் தவிர வார்த்தைகளே வராதென Microsoft தெரிவிக்கிறது. அதற்கு நூறு காரணங்களையும் அது பட்டியற்படுத்தியுள்ளது. அவற்றை http://www.microsoft.com/windows/products/windowsvista/100reasons.mspx எனும் முகவரியில் அறிந்துக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Microsoft இன் புதிய வெளியீடுகள்

# Windows Vista™

## 'Wow' என்பதைத் தவிர வர்ணிக்க வேறு வார்த்தைகளே இல்லை.


*தாரிக் அஸீஸ்*

பல எதிர்பார்ப்புகளைத் தோற்றுவித்திருந்த Windows Vista ஜனவரி மாதம் 30ம் திகதி வெளியிடப்பட்டது. பல நாடுகளிலும் மிகவும் கோலாகலமான வைபவங்கள் நிகழ்த்தப்பட்டு வெளியிடப்பட்ட Windows Vista பணிசெயல் முறைமை பல சிறப்பு குணாதிசயங்களைக் கொண்டுள்ளதாகக் காணப்படுகின்றது.

சுமார் ஐந்து வருட காலமாக அபிவிருத்தி செய்யப்பட்ட இந்த Vista வானது, ஏற்கனவே, Microsoft நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட, Windows பணிசெயல் முறைமையின் வெவ்வேறு பதிப்புகளில் காணப்பட்ட அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்து, மிகவும் துரிதமாக இயங்கக் கூடியவகையில் உருவாக்கப் பெற்றுள்ளது.

கணினியொன்றில் காணப்படும் கோப்புகளை இலகுவில் மிக வினைத் திறனாக தேடிப் பெறக்கூடிய வசதியை Windows Vista கொண்டுள்ளது. Start button இனை Click செய்ய வரும் Startup bar இலேயே Search எனும் கட்டளையை செயற்படுத்தும் பொருட்டு Text box காணப்படுகின்றது. இதில் நாம் எமக்குத் தேவையான கோப்பின் பெயரை Type செய்ய, அந்தச் சொற்கள் காணப்படும் அத்தனை கோப்புகளும் Real Time இல் பட்டியற்படுத்தப்படும். முன்னைய பதிப்புகளைப் போல், Search என்ற கட்டளை செயற்படுத்தி, உரிய சொல்லை Type செய்து. கணினி தேடித்தரும் பட்டியல் வரும் வரை காத்திருக்க வேண்டிய தேவை Vista வில் இல்லை. இதனால் நேரம் மீதமாக்கப்படுவதோடு, காரியங்களை வினைத் திறனாகச் செய்யவும் முடியும்.

### "Wow" தொடங்கியது!




Windows Vista இன் Start Menu இதுவாகும். புதிதாக Search எனும் பண்பு இணைக்கப்பட்டுள்ளது.

முப்பரிமாண முறையில் அமைந்துள்ள Vista வின் காட்சித் திரைகள் மிகவும் கவர்ச்சியானவையாகும். இவை கண்களுக்கு குளிர்ச்சியாக அமைவதோடு, பயனர்களுடனான சிறந்த ஊடாடு நிலையையும் தோற்றுவிக்கக்கூடியது. Vista வில் மிகவும் புதிதாக 3D Auro எனும் வகையிலமைந்த, முப்பரிமாண திரைக் கோலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் நாம் விரும்பும் வின்டோவினை விரைவாக Select செய்து Active ஆக்கிக் கொள்ள முடியும்.

இணைய இணைப்பில் இருக்கும் கணினிகளுக்கு துருவிகள் என இனங்காணப்படும் Hackers இனால். செய்யப்படும் நாசகாரச் செயல்களை Vista பணியெல்முறைமை இழிவளவாக்கியுள்ளது. இதன் காரணமாக தொடரறா நிலையில் கணினிகள் காணப்படும் போதும், பாதுகாப்பாக இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. "Vista வானது பாதுகாப்பு தொடர்பில் மிக மிக வலிமையான பதிப்பாகும்" என்று Vista வெளியீட்டில் கலந்து கொண்ட Microsoft நிறுவனத்தின் தலைவர் Bill Gates தெரிவித்தார்.

"இணையத் தொடர்பின் பாதுகாப்பு தொடர்பில் அச்சம் கொண்டவர்கள், Vista வின் வருகையினால் மகிழ்ச்சியடைவார்கள். ஏனெனில், Vista வானது, இணையப் பாதுகாப்பு தொடர்பில் மிகவும் தெளிவான முன்னெடுப்புகளை ஏற்படுத்தி யுள்ளது" என அவர் மேலும் தெரிவித்தார்.

Windows Vista வும் பல புதிய Patch மென்பொருள்கள் மூலம் காலத்துக்குக் காலம் இற்றைப்படுத்தப்படுவது அவசியமாகுமென தொழில்நுட்ப விமர்சகர்கள் எதிர்வு கூறுகின்றனர்.

2011 ஆம் ஆண்டு வரைக்கும் Windows XP தொடர்பான விடயங்களை பயனர்களுக்கு வழங்கவுள்ளதாக Microsoft அறிவித்துள்ளது. கடந்த வருடம் Windows 98 தொடர்பாக பயனர்களுக்கு உதவிகளைச் செய்யும் நடவடிக்கையை Microsoft நிறுவனம் கைவிட்டதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் 12 மாதங்களில் 100 மில்லியனுக்கும் அதிகமான கணினிகள் Windows Vista வை அவற்றின் பணிசெயல் முறைமையாகப் பாவிக்குமெனஎதிர்பார்க்கப்படுகின்றது.Home Basic, Home Premium, Ultimate மற்றும் Starter எனும் நான்கு வித்தியாசமான பதிப்புகளில் Windows Vista வெளியிடப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு முடி வடைவதற்குள் 15

**"இணையத் தொடர்பின் பாதுகாப்பு தொடர்பில் அச்சம் கொண்டவர்கள், Vista வின் வருகையினால் மகிழ்ச்சி அடைவார்கள்**



TOP: AFP PHOTO
BOTTOM: AP PHOTO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதமான Windows XP இனை பாவிக்கும் கணினிகள் Windows Vista வினை பணிசெயல் முறைமையாக பாவிக்குமென Ovum எனும் தொழில்நுட்ப பகுப்பாய்வு நிறுவனம் எதிர்வு கூறுகின்றது.

Windows Vista வினை நிறுவுவதற்கு தமது கணினி தகுந்தவன்பொருள் தகவுநிலையைக் கொண்டுள்ளதா என அறிந்து கொள்ள Microsoft நிறுவன இணையத்தளத்திற்கு சென்று தமது கணினியை யாரும் பரீட்சித்துப் பார்க்க முடியும். இதற்கான ஏற்பாடுகளை Microsoft நிறுவனம் மிகவும் பொருத்தமான வகையில் செய்துள்ளது.

இன்னும் பத்தாண்டுகளில் பாடசாலை மாணவர்கள், பாடப் புத்தகங்களுக்குப் பதிலாக, Tablet-PC களையே பயன்படுத்துவார்களென எதிர்வுகூறும் Bill Gates,

**எம் நாட்டில் Vista வெளியீடு**



கடந்த பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி Microsoft இன் இலங்கை கிளை உத்தியோகப்பூர்வமாக Windows Vista வை கலை நிகழ்ச்சிகளோடு கூடிய பிரமாண்டமான வைபவத்தில் வெளியீட்டு வைத்தது.

இதன் போது, Windows Vista பணிசெயல் முறைமையின் அவசியம் வெகுவாக உணரப்படும் எனவும் தெரிவித்தார்.

Apple நிறுவனம் வெளியிடவுள்ள iPhone உம், பணிசெயல் முறைமையின் அத்தியாவசியத்தினை எடுத்துரைக்கும் இன்னுமொரு சாதனமாகவே கருத வேண்டியுள்ளது. இன்றளவில் மில்லியன் கணக்கான செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் கையடக்க இலத்திரனியல் சாதனங்களில் Microsoft நிறுவனத்தின் வெவ்வேறுபட்ட Windows பதிப்புகள் பாவிக்கப்படுவதும் கவனிக்கப்பட வேண்டும்.

புதிய பயனர் அனுபவத்தினைத் தரக்கூடிய Windows Vistaவின் மூலம் பணிகளை ஆற்ற, எமது கணினிகளை நாம் தயார்படுத்தியுள்ளோமா என்ற கேள்விக்கு மத்தியில், எமது சிந்தனைகளை புத்தாக்கங்களை உருவாக்குவதின் பால் ஈடுபடுத்த வேண்டியதன் அவசியத்தினை, தொழில்நுட்ப மாற்றங்களின் மூலம் தோற்றுவிக்கப்படும் வருவிளைவுகள் வேண்டி நிற்பதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். ■



# புதிய மென்பொருள்களோடு புதுமைகளை அனுபவியுங்கள்

*சிரியான் டி சில்வா விஜயரத்ன,*
*இலங்கைக்கான Microsoft இன் முகாமையாளர்*

**Exclusive**

***கே:** Windows Vista மற்றும் Office 2007 ஆகிய மென்பொருள்களை உலகளவில் ஒருமிக்க Microsoft வெளியிட்டமைக்கான காரணம் என்ன?*

**ப:** Windows Vista வின் புதிய பாதுகாப்பு, மற்றும் தேடல் தொடர்பான முன்னேற்றங்களோடு இணைந்தாற்போல், மிக வினைத்திறனாக இயங்கக்கூடிய வகையில் Ms Office 2007 அமைந்தது. இதனால் அவையிரண்டையும் ஒருமிக்க வெளியிட்டோம். எதிர்பார்த்திருந்த மக்களின் ஆசையை உலகளவில் நிறைவேற்றினோம்.

***கே:** வெளியிடப்பட்டுள்ள மென்பொருள்களில், கணினி பயனர்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா?*

**ப:** ஆம். நிச்சயமாக, இணையப் பாதுகாப்பு, தேடல் வினைத்திறன் மற்றும் வினோதாம்ச விடயங்களை மிக வினைத்திறனான முறையில் அனுபவிப்பதற்கான வாய்ப்புகளை புதிய மென்பொருள்கள் ஏற்படுத்தியுள்ளன. இதனால், கணினிப் பயனர்களின் பாவனைக் கோலங்களில் இவை நிச்சயம் புரட்சியை ஏற்படுத்தும்.

***கே:** எமது நாட்டில் Open Source மென்பொருள் பாவனை அதிகரித்து வரும் நிலையில், Microsoft வெளியிட்டுள்ள விலையுயர்ந்த மென்பொருளினை மக்கள் பெற்றுக்கொள்ள ஆர்வம் காட்டுவார்களா?*

**ப:** மென்பொருள் துறையில் போட்டியாளர்கள் பலரும் எமக்கு இருக்கின்றார்கள். இருந்தபோதும் உலகளவில் பாவிக்கப்படும் கணினிகளில், 95 சதவீதமானவை எமது Windows பணிசெயல் முறைமையிலேயே இயங்குகிறது. இதிலிருந்து, கணினிப்பயனர்கள் எமது மென்பொருள்களில் காட்டும் நாட்டம் தெளிவாகத் தெரிகிறது. அத்தோடு, Windows Vista ஐ பல Version களிலும் வெளியிட்டுள்ளோம். Windows Vista Starter Edition எனும் சிறப்புப் பதிப்பை குறைந்த நியாயமான விலையில் பெறமுடியும்.

***கே:** புதிதாக வெளியிடப்பட்டுள்ள மென்பொருள் தொகுதிகளைப் பெற்றுக் கொள்வதில் இலங்கையில் கணினி பயனர்களின் ஆர்வம் பற்றி சொல்லுங்கள்?*

**ப:** எங்களுக்கு மிகப்பெரிய ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளது. Windows Vista வின் Beta பதிப்பை பல பயனர்கள் இலங்கையில் பாவித்திருந்தார்கள். பெரிய பல நிறுவனங்களும், எங்களது மென்பொருள்களை வாங்குவதில் தீவிரம் காட்டுகின்றன. Microsoft இன் உற்பத்திகளில் இலங்கைக் கணினிப் பயனர்களுக்கு அதிக ஆர்வமுள்ளதென்றே சொல்லவேண்டும்.

***கே:** உலகளவில் Microsoft எதனை எதிர்காலத்தில் வழங்கத் திட்டமிட்டுள்ளது?*

**ப:** கணினிப் பயனர்களின் வேலைகளை இலகுவாகச் செய்யும் பொருட்டு, விஷேடித்த மென்பொருள்கள் புதிய மாற்றங்களுடன் அறிமுகப்படுத்தும் அதே வேளை, இத்தொழில்நுட்பங்களை உள்வாங்கும் நிலைக்கு பயனர்களையும் (Stakeholders) தயார்படுத்துவதிலும் ஆர்வங் காட்டிவருகிறது.

***கே:** இலங்கையில் தகவல் தொழில்நுட்பத் துறையை முன்னேற்றுவதில் Microsoft முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?*

**ப:** எங்களது கம்பனி இலங்கையின் பாரியளவில் முதலீடு செய்துள்ளதோடு, இலங்கையின் தகவல் தொழில்நுட்பத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. அரசாங்கம், மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களோடு இணைந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தற்போது கல்வியமைச்சுடன் இணைந்து, ஆசிரியர்கள் அனைவரையும் கணினியொன்றின் சொந்தக்காரர்களாக்கும் செயற்றிட்டத்தை மேற்கொண்டுள்ளோம். இது அகில இலங்கை ரீதியில் சகல பாடசாலைகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

***கே:** எமது சஞ்சிகையூடாக கணினிப் பயனர்களுக்கு என்ன செய்தியை சொல்ல விளைகின்றீர்கள்?*

**ப :** புதிய தொழில்நுட்ப அடைவுகளை எமது நாட்டு மக்களும் பெற்றும் கொள்ளும் நோக்கோடு Microsoft அதன் மென்பொருள்களை எமது நாட்டிலும் வெளியிட்டுள்ளது. புதிய மென்பொருள்களை வாங்கி உங்கள் கணினிகளையும் வலிமையாக்கி, அவற்றின் புதுமைகளை அனுபவிக்க முனையுங்கள். தொழில்நுட்ப விடயங்களில் இற்றைப்படுத்திய மாறுதல்களையடைய மென்பொருள்களை வழங்குவதில் Microsoft என்றுமே முன்னிற்கும் என கூற விரும்புகிறேன். ■

நேர்காணல்: தாரிக் அஸீஸ்


WNL PHOTO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Micrsoft நிறுவனத்தின் ஜப்பான் நாட்டு கிளையின் தலைவர் Darren Huston புதிய மென்பொருள் தொகுதியின் இயக்கம் பற்றி விளக்குகின்றார்.

# பயனர்களின் ஊடாடு நிலையை அதிகரிக்கும் Microsoft இன் புதிய இற்றைப்படுத்தபட்ட மென்பொருள் தொகுதி





*தாரிக் அஸீஸ்*

புதிய பணிசெயல்முறைமையான Windows Vista இன் வெளியீட்டுடன் இணைந்தாற் போல், Microsoft நிறுவனம் Office மென்பொருள் தொகுதியினையும் வெளியிட்டுள்ளது. இந்தத் தொகுதியிலுள்ள மென்பொருள்கள் பல புதிய பண்புக்கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளதாக அமைக்கப்பட்டுள்ளன.

மென்பொருள்களை இயக்கும்போது, திரையில் தோன்றும் காட்சி, முந்திய office பதிப்புகளை விட இதில் வித்தியாக இருப்பதோடு, முன்னேற்றகரமானதாகவும் இருக்கிறது. முந்திய Microsoft office தொகுதியிலுள்ள மென்பொருள்களில் காணப்படும் Menu எனும் பட்டி, புதிய தொகுதியில் காணப்படவில்லை. அவை, Tab வகையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதனால், பயனர்களுக்கு கருமங்களை ஆற்றுவது இலகுவாகிறது.

நாம் தயாரிக்கும் ஆவணங்களை Zoom செய்து காண்பதற்கு, காட்சித்திரையின் வலது பக்க கீழ்மூலையில், Slider மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது.

நாம் ஆவணங்களைத் தயார் செய்யும் போது, அடிக்கடி Save செய்வோம். Save செய்த பின்னர், Undo என்ற கட்டளையானது தொழிற்படாது. இதனால், Save செய்ய முன்னர் இருந்த ஆவணத்தைப் பெறுவது Microsoft Office இன் பழைய பதிப்புகளில் முடியாத காரியமாகவே இருந்தது. ஆனால், புதிய office தொகுதியில், Save செய்ய முன்னர் இருந்த ஆவணத்தினை Restore செய்து கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் தரவு, தகவல் இழப்பு ஏற்படும் சாத்தியங்கள் இழிவாக்கப்பட்டுள்ளது.



புதிய Micrsoft Office Word 2007 இல் நிழற்படங்களைச் சேர்த்து அவற்றை விதவிதமாக வடிவமைக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலே நிழற்படங்களுக்கு வழங்கக்கூடிய Effect களின் முன்பார்க்கை தோற்றத்தையே காண்கிறீர்கள்.

AFP PHOTO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Microsoft Office Word 2007

1. ஒரே கிளிக் மூலம் ஆவணங்களை பல புதிய Graphics நுட்பங்களுடன் உருவாக்கக்கூடிய் தன்மை. Professional ஆவணங்களை தொகுக்கலாம்.
2. ஆவணங்களின் உள்ளடக்கங்களை மிக விரைவாக ஒழுங்குபடுத்தக் கூடிய மென்கருவி விரிவாக்கம் காணப் படுகிறது.
3. இரண்டு ஆவணங்களை மிக விரைவாக ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள முடிகிறது. இதனை புதிய tri-pane review panel சாத்தியமாக்குகிறது.
4. ஆவணத்திலுள்ள தனிப்பட்ட விடயங்கள் உச்சளவில் பாதுகாப்பாக கையாளுகின்ற தன்மை
5. வடிவமைப்பைச் செய்வதற்கு அதிகளவான சிறப்புமிக்க தெரிவுகள் காணப்படுகின்றன.

## Microsoft Office Excel 2007

1. அதிகளவான தரவுகளை கையாளும் வகையிலமைந்த விரிவாக்கப்பட்ட Spreadsheets.
2. தொழில்ரீதியான நிலையைக் கொண்ட வகையில் வெவ்வேறு சிறப்பான வடிவமைப்புகளில் வரைபுகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள்.
3. அட்டவணைகளை மிகவும் நேர்த்தியாக உருவாக்கி, அவற்றை வினைத்திறனாக கையாளும் திறன்.
4. Pivot Table எனப்படும் தரவுகளை ஒழுங்குபடுத்தும் அட்டவணை மூலம், மிகவும் கிரமமாக தரவுகளை கையாளும் திறன்.
5. நிபந்தனைச் சமன்பாடுகளைப் பிரயோகித்து, எமக்குத் தேவையான தரவுகளின் வருவிளைவுகளை பெறும் மற்றும் தேடும் திறன்.

## Microsoft Office PowerPoint 2007


1. உயர் சிறப்பான வருவிளைவுகளைத் தரக்கூடிய வரைபு, மற்றும் வரைதல் களை Smart Art எனும் தெரிவினைப் பயன்படுத்தி மேற்கொள்ளலாம்.
2. Presentation களை உருவாக்க வெவ்வேறு வகையான Layout களை கொண்ட அமைப்புகளைப் பயன்படுத்த முடியும்.
3. புதிய பல வகை Professional அடிப்படையில் அமைந்த theme களை Slide களுக்கு இட்டுக்கொள்ளக்கூடிய வசதி.
4. Text, Shapes, Graphics, மற்றும் effects ஆகியவற்றை எமது விரும்பத்திற்கு ஏற்ப அமைத்துக் கொள்ளும் வசதி.
5. உருவாக்கும் Presentation தொடர்பில் தனிநபர் தகவல்கள் பாதுகாக்கப்படும் நிச்சயிக்கப்பட்ட தன்மை.

Open Office மென்பொருள் தொகுதியில் இருந்த ஆவணங்களை PDF ஆக மாற்றி சேமிக்கின்ற வசதியும், புதிய Microsoft office 2007 தொகுதி மென்பொருள்களில் சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, XML, ODF போன்ற திறந்த ஆவண வடிவமைப்புகளிலும் ஆவணங்களை சேமிக்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இதனால் பயனர்கள் ஆவணங்களை PDF ஆக்குவதற்கு இனி மூன்றாம் நிலை மென்பொருள்களின் தயவை நாடியிருக்கத் தேவையில்லை.


காட்சித்திரையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், விஸ்டாவின் பயனர் ஊடாடு நிலையைக் கூட்டுவதைப் போல், Microsoft Office 2007 மென்பொருள் தொகுதியும் பயனர் ஊடாடு நிலையை (Interactive) அதிகரிக்கின்றது. Real Time இல் நாம் செய்ய எத்தனிக்கும் மாற்றங்களை காட்டுவதற்கு Ms office மென்பொருள்களுக்கு முடிகிறது. இதனால் நேரம் மீதப்படுத்தப்படுகின்றது.

அத்தோடு, புதிய மென்பொருள் தொகுதியோடு Microsoft Office OneNote 2007 எனும் மென்பொருளும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் Tablet PC இன் கணினித் திரையில் நாம் எழுதுவதை இனங்கண்டு எழுத்துருவாக மாற்றமுடியும். இதனால் விரைவாக எமது ஆவணங்களை தொகுத்து முடிக்கலாம். இதுபோன்ற பல சிறப்பம்சங்களை இற்றைப்படுத்தப்பட்ட புதிய Microsoft Office 2007 மென்பொருள் தொகுதி தன்னகம் கொண்டுள்ளது. ■




புதிய Micrsoft Office Excel 2007 இல் சிறப்பு வருவிளைவான வரைபுகளை இலகுவில் தொகுக்க முடியும். வரைபொன்றை தொகுக்கின்ற இடைமுகம் இது.




புதிய Micrsoft Office PowerPoint 2007 இல் எழுத்துருக்களுக்கு விசேடமான பல Effect களை வழங்க முடியும். அதன் இடைமுகமே இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பகிரப்படவுள்ள விளம்பர வருமானம்

உதய தாரகை

> You Tube இணைய அடிப்படையான வீடியோ பகிர்வுத் தளம், பயனர்களிடையே, விளம்பர வருமானத்தினைப் பகிர்ந்து கொள்ளவுள்ளது.

**You Tube** Broadcast Yourself™

- Google இற்கு தற்போது சொந்தமான கம்பனி.
- 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது
- அமெரிக்காவின் கலிபோர்னியாவில் தலைமையகம் உள்ளது.
- Chad Hurley, Steve Chen, Jawed Karim ஆகியோர் இதன் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள்.
- 67 ஊழியர்கள் இங்கு கடமை புரிகின்றார்கள்.
- www.youtube.com என்பதே இதன் இணையத்தள முகவரியாகும்.

இணையப்பரப்பில் நிழற்படத்திற்கு Flickr போன்று, வீடியோவிற்கு You Tube என்றே சொல்ல வேண்டும். மாதாந்தம் You Tube இணையச் சேவையை 70 மில்லியனுக்கும் அதிகமான பயனர்கள் பயன்படுத்துவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சேவையை Google நிறுவனம் 1.65 பில்லியன் அமெரிக்க டொலருக்கு கடந்த வருடம் நவம்பர் மாதம் வாங்கியமை PC Times மூலம் நீங்கள் அறிந்ததே!

You Tube நிறுவனத்தின் ஸ்தாபகர் சாட் ஹேலி (Chad Hurley), தமது நிறுவனம் விளம்பரங்களினூடாக பெறும் வருமானத்தினை பயனர்களிடையே பகிர்ந்துகொள்ள ஆர்வங் கொண்டுள்ளதாக அண்மையில் செய்தி நிறுவனமொன்றுக்கு கருத்துத் தெரிவித்தார். You Tube சேவையகத்திற்கு தங்களது சொந்த வீடியோ கோப்புகளை மேலேற்றும் (Upload) பயனர்களே, வருமானத்தில் ஒரு பங்கினைப் பெறப்போகும் இணையப் பாவனையாளர்களாவார்களெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பயனர்களிடையே பகிரப்படவுள்ள வருமானம் தொடர்பான சதவீதங்களை அறிவிக்க மறுத்த You Tube ஸ்தாபகர், இன்னும் சில மாதங்களில் You Tube பயனர்களுக்கு மிகப் பெறுமதியான பரிசு கிடைக்கப்போவது உறுதியென்று மட்டும் கூறினார்.

Revver போன்ற ஏனைய இணைய அடிப்படையான வீடியோ பகிர்வு தளங்கள் ஏற்கனவே தமது வருமானங்களை அசல் வீடியோ கோப்புகளை (Original Video Contents) பகிர்ந்து கொள்ளும் பயனர்களிடையே பகிர்ந்து கொள்கின்றன. இவ்வாறு You Tube இன் வருமானத்தை பகிர்ந்துகொள்ளும் செயற்றிட்டம் வெற்றியளிக்கும் வகையில் அமுல்படுத்துவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

You Tube இல் வேறு நிறுவனங்களுக்கு பதிப்புரிமையுடைய வீடியோ கோப்புகளையும் சில பயனர்கள் Upload செய்வதால், வீடியோ மற்றும் இசை தொடர்பான நிறுவனங்களின் எதிர்ப்பினை இந்நிறுவனம் அடிக்கடி சம்பாதிப்பதும் கவனிக்கப்பட வேண்டும். இருந்தபோதும், பதிப்புரிமையுடைய உள்ளடக்கங்கள் (Copyrighted Content) தமது இணையச் சேவையில் சேர்க்கப்பட்டால், அவற்றை இனங்கண்டு, சேவையகத்திலிருந்து (Server) அவற்றை நீக்கிவிடுவதற்கு தாம் என்றும் முன்னிற்பதாக You Tube நிறுவனம் சொல்கிறது.

2006 ஆம் ஆண்டின் TIME சஞ்சிகையின் வருடத்தின் சிறந்த கண்டுபிடிப்பாக (Invention of the Year) You Tube நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இதேவேளை, இணையத்தின் வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பை வழங்கும் சகல இணையப் பயனர்களையுமே (Netizens) 2006 ஆம் ஆண்டின் சிறந்த நபராக TIME சஞ்சிகை பெயரிட்டது. நீங்கள் ஒரு இணையப் பயனராக இருந்தால், 'You' - நீங்களும் 2006 ஆம் ஆண்டின் சிறந்த நபர் (Person of the Year) என்ற பட்டத்தைப் பெற்றவராகிறீர்கள். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PC TIMES

# கணினிக் கல்லூரி

கணினிப் பாட இணைப்பிதழ் மார்ச் 2007


12 Ms Word
14 Ms Excel
16 HTML
18 Photoshop
20 GIT
22 Java
24 Help Desk


## அடுக்களைக்குள் தொழில்நுட்ப ஆக்கிரமிப்பு



HP நிறுவனத்தின் ஊழியர் ஒருவர் அந் நிறுவனத்தின் தயாரிப்பான HP ToushSmort IQ 770 எனும் கணினியை செயற்படுத்திக் காட்டுவதை படத்தில் காண்கிறீர்கள். குடும்ப அங்கத்தவர்களுடன் எந்நேரமும் தொடர்புகளை நவீன தொழில்நுட்ப முறைகளின் மூலம் சாத்தியப்படுத்த விஷேடமாக உருவாக்கப்பட்டதே இக் கணினியாகும். இது சமையலறையில் பாவிக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இது Touch Screen கொண்டுள்ளதனால் திரையை தொடுவதன் மூலமே குடும்ப நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி, சங்கீதம், திரைப்படம், நிழற்படம் மற்றும் தனிப்பட்ட உங்கள் கணினியின் தரவுகளை கம்பியில்லா தொழில்நுட்ப வலையமைப்பின் உதவியுடன் பெற்றுக்கொள்ளமுடியும். சமையலறையில் பயன்படுத்தப்பட உருவாக்கப்பட்டிருந்தாலும் அனைத்து குடும்ப அங்கத்தவர்களும் பாவிக்கும் வகையில் இதன் வடிவமைப்பு காணப்படுகின்றது. ■

AFP PHOTO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவணங்களை இலகுவில் மிக நேர்த்தியாக வடிவமைப்பதற்கு உதவும் மென்பொருள் இதுவாகும். இதன் மூலம் சிறு கடிதம் முதல் தொட்டு பெரிய நூல்களைக் கூடத் தயார் செய்ய முடியும். கணினியைப் பயன்படுத்தும் சகலரும் அறிந்திருக்கவேண்டிய மென்பொருள் இதுவாகும்.


Microsoft Office
**Word**

# INSERT PICTURE

தாரிக்


கடந்த மாத இதழில் Ms Word இல் காணப்படும் Insert Menu வில் உள்ள Auto Text மற்றும் Symbol ஆகிய தெரிவுகளைப் பயன்படுத்தி, நாமுருவாக்கும் ஆவணங்களை விரைவாகத் தொகுப்பது தொடர்பாக ஆராய்ந்தோம். இம்முறை Ms Word இல் தொகுக்கும் ஆவணங்களுக்கு நிழற்படங்கள் மற்றும் வரிப்படங்கள் போன்றவற்றை எவ்வாறு சேர்த்து, ஆவணங்களை அழகுபடுத்தலாம் என ஆராய்வோம்.

ஆவணமொன்றில் அடங்கியுள்ள விடயங்களுக்கு பொருந்தும் வகையில் தேவையான இடங்களில் நிழற்படங்களை தெளிவாக வழங்குவது, ஆவணத்தை வாசிப்பவர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் அமையும். Ms Word இல் நாம் உருவாக்கும் ஆவணங்கள் விரும்பியது போல் நிழற்படங்களைச் சேர்க்கலாம். இதற்கு Insert Menu விலுள்ள Picture எனும் தெரிவு பயன்படும் (படம்-01). இந்தத் தெரிவினைச் சுட்டும் போது விரியும் உப மெனுவில், Clip Art, From File, From Scanner or Camera, Organization Chart, New Drawing, Autoshapes, Word Art மற்றும் Chart என தெரிவுகள் பட்டியற்படுத்தப்பட்டிருக்கும். இதில் முதல் மூன்று தெரிவுகளுமே நிழற்படத்தை ஆவணத்திற்குள் சேர்ப்பதற்கு வழிவகுக்கும். ஏனைய தெரிவுகள் பற்றி பிறிதொரு சந்தர்ப்பத்தில் ஆராய்வோம்.



படம் - 01

Clip Art என்ற தெரிவிவை மேற்கொள்கையில், திரையின் வலது புறமாக காணப்படும் Task Pane இல் Clip Art இனை தேடிப் பெறுவதற்கான Dialog box காட்சியாகும் (படம்-02). இதில் தமக்குத் தேவைப்படும் Clip Art இன் Keyword களை கொடுத்து தேடலாம். உதாரணமாக, விஞ்ஞான ரீதியான Clip Arts தேவையெனில், Science என்ற Key Word இனை வழங்கி தேடலாம். இதன்போது, குறித்த Keyword உடன் பொருந்தும் Clip Art காணப்பட்டால் அவை குறித்த Task Pane இலேயே Preview நிலையில் காட்சிப்படுத்தப்படும் (படம்-03). அவற்றில் நாம் விரும்பியதை தெரிவு செய்து ஆவணத்தில் சேர்க்கலாம்.




படம் - 02

From File என்ற தெரிவைப் பயன்படுத்தி, கணினியில் அல்லது Pen Drive, Floppy Disc போன்றவற்றில் சேமித்து வைக்கப்பட்டுள்ள நிழற்படங்களை எமது ஆவணத்திற்குள் சேர்க்கலாம். இதைச் சாத்தியப்படுத்த குறித்த From File என்ற தெரிவினை Select செய்ய, Insert Picture எனும் தலைப்பிலமைந்த Dialog box காட்சியாகும் (படம்-04). இதில், நாம் ஆவணத்தில் சேர்க்க வேண்டிய நிழற்படத்தினை தெரிவு செய்து Insert எனும் Button ஐ கிளிக் செய்ய, குறித்த நிழற்படம் ஆவணத்தினுள் சேர்க்கப்பட்டு விடும்.


From Scanner and Camera என்ற தெரிவைப் பயன்படுத்தி நிழற்படங்களை ஆவணத்தினுள் சேர்க்க, Scanner அல்லது Camera ஆனது கணினியுடன் பொருத்தமான வகையில் இணைக்கப்பட்டிருக்க வேண்டியது கட்டாயமாகும். அவ்வாறு காணப்படும் போதே, இந்தத் தெரிவினைப் பயன்படுத்தி ஆவணங்களில் நிழற்படங்களைச் சேர்க்க முடியும்.

மூன்று வெவ்வேறு முறைகளில் ஆவணமொன்றினுள் நிழற்படங்களைச் சேர்க்கலாமெனப் பார்த்தோம். இவ்வாறு சேர்க்கப்பட்ட நிழற்படங்களை எமது விருப்பத்திற்கேற்ப Edit செய்யும் வசதி Ms Word இல் இருக்கிறதா? என்ற கேள்வி உங்களுக்கும் எழுந்திருக்கும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




படம் - 03




படம் - 04




படம் - 05

Ms Word இன் ஆவணமொன்றில் சேர்க்கும் நிழற்படங்கள் ஏன் Clip Art போன்றவற்றையும் Edit செய்யும் வசதியுள்ளது. ஆவணங்களுக்குள் நிழற்படங்களை சேர்த்தவுடனேயே திரையில் தோன்றும் Picture எனும் தலைப்பிலமைந்த Tool bar இன் மூலம் நிழற்படங்களைத் தொகுக்க முடியும். குறித்த Picture Toolbar தோன்றவில்லையாயின், View Menuவில் Tool bars என்ற தெரிவினைச் சுட்டி, அதில் Picture என்ற Option ஐ தெரிவு செய்ய, Picture Tool bar திரையில் காட்சியாகும் (படம் -05).

இனி, Picture Toolbar இன் மூலம் நிழற்படங்களில் எவ்வாறான தொகுப்புகளை செய்யலாமென ஆராய்வோம். இங்கு ① என்ற இலக்கமிடப்பட்டுள்ள தெரிவை கிளிக் செய்வதன் மூலம், நிழற்படங்களை ஆவணத்தினுள் சேர்க்கலாம்.

② என்ற மென்கருவியின் மூலம் நிழற்படத்தை Grayscale, Black & White மற்றும் Washout எனும் மங்கலான வர்ண நிலைக்கு மாற்றியமைக்க முடியும்.

③ என்ற மென்கருவினைப் பயன்படுத்தி நிழற்படத்தை Contrast கூட்டிக் குறைக்கலாம். அத்தோடு, ④ என்ற மென் கருவிகளைப் பயன்படுத்தி, நிழற்படத்தின் Brightness ஐக் மாற்றியமைக்கலாம்.

⑤ என்ற மென்கருவியைப் பயன்படுத்தி, நிழற்படத்தை நாம் விரும்பிய வகையில் Crop செய்து பெற்றுக்கொள்ள முடியும்.

⑥ என்ற மென்கருவியானது, நிழற்படங்களை நிலைக்குத்தாக மற்றும் கிடையாக கோணங்களை மாற்றியமைக்கப் பயன்படுத்தப்படுகின்றது. அதுமட்டுமல்லாது, ⑦ மென்கருவியைப் பயன்படுத்தி, நிழற்படத்தைச் சுற்றி விரும்பிய வடிவமைப்பிலுள்ள கோடுகளை இடமுடியும். இவ்வாறு Border இடவென நிறைய வடிவமைப்பான கோடுகள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

⑧ மென்கருவியைப் பயன்படுத்தி, நிழற்படத்தினை ஒடுக்கம் (Compress) செய்து கொள்ள முடிவதோடு, ⑨ மென்கருவியானது, நிழற்படத்தின் அமைவுக்கு ஏற்ப Text Wrap செய்வதற்கு உதவக்கூடியது. அத்தோடு, ⑩ மென்கருவியைப் பயன்படுத்தி, Border இன் நிறம், Clip Art ஆக அமைந்தால் அவற்றின் நிறம் போன்றவற்றையும் மாற்றியமைக்கலாம்.

இவ்வாறாக, மேற்சொன்ன அத்தனை மென்கருவிகளும் விஷேடித்த தொழிற்பாடுகளை செய்யும் பொருட்டு உருவாக்கப்பட்டுள்ளன. நீங்கள் இம்மென்கருவிகளைப் பயன்படுத்தி மாற்றங்களைச் செய்துள்ளீர்கள். ஆனால், முதலில் அமைந்த மாற்றமெதுவும் செய்யப்படாத Original நிழற்படத்தினை பெற்றுக்கொள்ள நினைத்தால், ⑪ என்ற மென்கருவியை கிளிக் செய்தும் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் உருவாக்கும் ஆவணங்களிலும், நிழற்படங்களை வெவ்வேறு வகையில் சேர்த்து அழகுபடுத்தலாமே! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Microsoft Office
**Excel**

கணித்தல் தொடர்பில் அதிகம் பிரசித்தமான மென்பொருள் இதுவாகும். இந்த மென்பொருளை உபயோகித்தே அநேகமான வரவுசெலவுகள் பதிவுசெய்யப்படுகின்றன. இதன் செயற்பாடுகளை அறிந்திருப்பதன் மூலம் திட்டமான வாழ்க்கை முறையை உருவாக்கிக் கொள்ளலாம்.

# Excel இல் Print செய்தல்

தாரிக்


பொதுவாக, ஆவணமொன்றை Print செய்ய வேண்டி ஏற்பட்டால், குறித்த மென்பொருளின் File Menu இல், Print கட்டளையை தெரிவு செய்து அதன்போது தோன்றும் dialog box இல் எமக்குத் தேவையான தெரிவுகளை மேற்கொண்டு, Print செய்ய முடியும். Ms Excel இலும் இவ்வகையில் Print செய்து கொள்ள முடியும். ஆனாலும் Ms Excel இல் பல விஷேடித்த முறையிலும் Print செய்து கொள்ளலாம். இவை, எமக்கு தேவையான ஆவணப் பிரதியை பொருத்தமான வகையில் பெற்றுக் கொள்ள உதவும்.

சாதாரணமாக Ms Word இல் Print கட்டளையை தெரிவு செய்ய தோன்றும் dialog box ஐப் போன்றல்லாது, Ms Excel இல் வித்தியாசமான dialog box காட்சியாகும். இந்த dialog box இனை Ctrl Key உடன் P Key ஐ அழுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.


தோன்றும் Print எனும் தலைப்புடைய dialog box இல் Print what எனும் பகுதியில் Selection, Entire workbook, மற்றும் Active Sheet(s) என்ற தெரிவுகள் காணப்படும்.

நாம் உருவாக்கியுள்ள Work Sheet இல் Select செய்யப்பட்டுள்ள பகுதியை மட்டும் Print செய்ய நினைத்தால், Selection தெரிவை மேற்கொள்ளலாம். செயற்பாட்டிலுள்ள Work Sheet களை Print செய்ய வேண்டின், Active Sheet(s) எனும் தெரிவை Select செய்யலாம்.

மொத்தமாக Work book இல் உள்ள அத்தனை பக்கங்களையும் Print செய்ய வேண்டியேற்பட்டால், Entire Work book எனும் தெரிவை மேற்கொள்ளலாம்.




படம் - 01




படம் - 02

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Properties எனும் Button ஐ Click செய்து எமக்குத் தேவையான பக்க அளவைத் தெரிவு செய்யலாம்.

Copies எனும் பகுதியிலுள்ள No. of Copies எனும் இடத்தில் எத்தனை பிரதிகள் வேண்டும் என கொடுக்கலாம். Print Range எனும் பகுதியில், குறித்த Workbook இல் சில குறித்த பக்கங்கள் மட்டும் Print செய்ய எண்ணினால் அவற்றின் Range ஐ வழங்கலாம்.

Ms Excel இல் வரைபுகளை மிக நேர்த்தியாக வரைந்து கொள்வது எப்படியென 2006 ஆம் ஆண்டு செப்டம்பர் மாத தமிழ் PC TIMES இல் பார்த்திருந்தோம். இவ்வாறு வரையும் வரைபுகளை மட்டும் A4 தாளிலோ, அல்லது எமக்கு விரும்பிய அளவுள்ள தாளிலோ Print செய்வது பற்றி அறிந்து கொள்வோமா?

உங்கள் தரவுகள் மற்றும் தகவல்களை வழங்கிய பின்னர், உருவாக்கப்படும் வரைபை Select செய்து, பின்னர் Print கட்டளையை மேற்கொள்ள, Print dialog box இவ்வாறு காட்சியாகும் (படம்-02).

இந்த dialog box இல் Print what எனும் பகுதியில் Selected chat எனும் பகுதி மட்டுமே Active நிலையில் காணப்படும். ஆக, Properties பகுதியில் குறித்த வரைபு Print செய்யப்பட வேண்டிய தாளின் அளவை Select செய்து Ok செய்யும்போது. தாள் முழுக்க நீங்கள் தெரிவு செய்த Graph ஆனது Print ஆகி வரும்.

இந்த விஷேட ஏற்பாடு, வரைபுகளை மட்டும் Print செய்து கொள்வதற்காக, Ms Excel இல் உருவாக்கப்பட்டுள்ளதாகும். ■

## Win Pen Drives

*கடந்த மாதம் இப்பகுதியில் கேட்கப்பட்ட கேள்விக்கான விடை*

- Insert Menu வில் Symbol எனும் தெரிவை கிளிக் செய்ய வேண்டும். Symbol எனும் தலைப்பில் அமைந்த Dialog Box காட்சியாகும். அதில் Shortcut Key எனும் Button ஐ கிளிக் செய்ய வேண்டும். பின்னர் காட்சியாகும் Customize Keyboard எனும் தலைப்புடைய Dialog Box இல் Shortcut Key யை Type செய்து Ok செய்ய வேண்டும்.

*கடந்த மாத வெற்றியாளர்கள்*

- A.L. அப்துல் பாஷித், 49, மஜிட் புரம், வரிபத்தான்சேனை-03. அம்பாறை.
- A. பிரியன்கா, C/o A. சுகந்தினி பொன்னம்பலம் ஒழுங்கை, உடுவில் வீதி, மானிப்பாய், யாழ்ப்பாணம்.
- M.I. பாத்திமா, 197/6a, கல் பொக்க வீதி, வெலிகம.

*இம் மாத கேள்வி*

கணினியொன்றில் காணப்படும் Port களின் வகைகளையும் அவை ஒவ்வொன்றினதும் பிரதான தொழிற்பாட்டையும் பட்டியற் படுத்துக.

*பதில் அனுப்பவேண்டிய முகவரி*

Win Pen Drives, PC TIMES Magazine, Wijeya Newspapers Ltd. No. 08, Hunupitiya Cross Road, Colombo – 02.

*விடைகளை தபால் அட்டையில் மாத்திரமே எழுதி மார்ச் 23 க்கு முதல் அனுப்பி வைக்கவும்*

## WIN FREE SUBSCRIPTIONS

*கடந்த மாத கேள்விக்கான விடை*

**Disk Cleanup**

*பெப்ரவரி மாத வெற்றியாளர்கள்*

- G. உஷா, அர்ச்சுனர் வீதி, பாண்டியிருப்பு-01, கல்முனை.
- S. ஜனகன், ஆலையடி வீதி, தம்பிலுவில் -02.
- V. குகதர்சன், வவுனியா பல்கலைக்கழகம், பாக் வீதி, வவுனியா.
- J. ஜனனி, 65A, IBC வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06.
- A.F.M. இம்தாஸ், 671, வெல்கம, மல்வான.
- M.H.F. வஜீஹா, 620, கொழும்பு வீதி, இலுகவத்த, கடுகண்ணாவ.
- M.U.A. சப்ரி, 41, டவர்ஹில் வீதி, ஹம்பாந்தோட்டை.
- S. கமலரூபன், ரோசா வத்தை, புத்திரர்கண்டன், முருங்கன்.
- M.H.M. ரினோஸ் "ரிஷ்வான் மன்சில்" வெலிராவ, எகொட, பதுளை.
- M.Z.A. சமீர், A/2, முருதுவல, இங்லோய, மாவனல்லை.

*விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:*

*Win PC Times*
*PC Times Magazine,*
*Wijeya Newspapers Ltd.,*
*No. 08, Hunupitiya Cross Road,*
*Colombo -02.*

*வெற்றியாளர்களுக்கு ஏப்ரல் மாதம் முதல் மூன்று மாதங்களுக்கான தமிழ் PCTIMES சஞ்சிகை தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.*




*இம் மாதத்திற்கான கேள்வி:*

இணையக் கட்டமைப்பில் காணப்படும் DNS Server களின் தொழிற்பாட்டை குறிப்பிடுக.

*கேள்விக்கான விடையை தபால் அட்டையில் அல்லது pctimes@wijeya.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மார்ச் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தகவல்களை வழங்குவதிலும் பெற்றுக்கொள்வதிலும் மிகவும் உறுதுணையாக அமைவது இணையமாகும். இணையமானது தகவல்களை இணையப்பக்கங்கள் மூலமாகவே வழங்குகின்றது. இணையப்பக்கங்களை வடிவமைப்பதில் அடிப்படையான இணையமொழியாக HTML காணப்படுகிறது.

HTML

# இணையப் பக்க வடிவமைப்பு


*அகமது நிஷாட்*

இதற்கு முந்தைய இணையம் தொடர்பான இந்தப் பகுதியில் நாம் இணையப் பக்கத்தில் உள்ள டெக்ஸ்ட் இனை சீரமைப்பது (ALIGN) மற்றும் இணையப் பக்கத்திற்கு நிழற் படங்களைச் சேர்ப்பது எப்படி என்றும் பார்த்தோம். இம்முறை நாம் படங்களைச் சீரமைத்து, படங்களைச் சுற்றி டெக்ஸ்டை வைப்பது மற்றும் உங்கள் இணையப் பக்கத்திற்கு பின்புல (BACKGROUND) நிறம் அல்லது படம் ஒன்றைச் சேர்ப்பது எப்படி என்று பார்ப்போம்.

நாம் முன்பு சேமித்த HTML கோப்பை NOTEPAD இல் திறவுங்கள். அதில் நாம் படத்தை இணைப்பதற்கு நாம் உபயோகித்த ஒட்டு <IMG> இற்கு முன்னால் நாம் டெக்ஸ்ட்டை சீரமைத்தவாரே (ALIGN) நாம் எமது படங்களையும் <RIGHT> </RIGHT>, <CENTER> </CENTER> ,<LEFT> </LEFT> போன்ற ஒட்டுக்களை உபயோகித்து சீரமைக்க (ALIGN) முடியும். இவ்வாறு நாம் <CENTER> </CENTER> ஒட்டுக்களை உபயோகித்து சீரமைத்த இணையப் பக்கத்தின் குறிமுறையையும் (படம் -01) இணையப் பக்கத்தையும் (படம்- 02) கீழே காணலாம். இதே போன்று நாம் மேற்கூறிய ஒட்டுக்கள்ளயும் பாவித்து எமது படங்களை சீரமைத்துக்கொள்ள முடியும்.

```
<html>
<head>
<title>THE INTERNET</title>
</head>
<body>
<h1><center>THE INTERNET</center></h1>
<p><font color="red">
The Internet is one of the largest network of computers that connect
to each other in millions or trillions with the help of pheripheral
devices such as the modem and the network card.
</font></p>
The Internet connection comes through the telephone line as in the
classical days and as the case now it comes in wireless.
<br>
<center><img border="0" src="internet_001.jpg" width="100"
height="100"></center>
<br>
Nobody knows exactly how many computers are connected to the
Internet but a rough calculation says it is around 20trillion
commputers.
</body>
</html>
```

படம் 1





படம் 2

```
<html>
<head>
<title>THE INTERNET</title>
</head>
<body>
<h1><center>THE INTERNET</center></h1>
<p><font color="red">
The Internet is one of the largest network of computers that connect
to each other in millions or trillions with the help of pheripheral
devices such as the modem and the network card.
</font></p>
The Internet connection comes through the telephone line as in the
classical days and as the case now it comes in wireless.
<br>
<img border="1" src="internet_001.jpg" width="100" height="100"
align="left" >
<br>
Nobody knows exactly how many computers are connected to the |
Internet but a rough calculation says it is around 20trillion
commputers.
</body>
</html>
```

படம் 3

நீங்கள் படங்களைச் சேர்த்தபோது உங்கள் படங்களைச் சுற்றி TEXT வரவில்லை என்பதனை நீங்கள் கவனித்திருப்பீர்கள். அவ்வாறு உங்களுக்கு TEXT படத்தைச் சுற்றி தேவை எனில் உங்கள் படத்தின் ஒட்டில் (TAG) உள்ள ALIGN எனும் பண்புக்கூற்றுக்கு (ATTRIBUTES) LEFT அல்லது RIGHT எனக் கொடுங்கள். முன்பு கூறியவாறே LEFT என்று கொடுத்தால் உங்கள் படம் இடது பக்கத்திற்கும் RIGHT என்று கொடுத்தால் வலது பக்கத்திற்கும் இடம் மாறும். LEFT ALIGN செய்த எனது இணையப் பக்கத்தின் குறிமுறையையும் (படம்-03) இணையப் பக்கத்தையும் (படம்-04) கீழே காணலாம்.




படம் 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது நாம் எமது இணையப் பக்கத்திற்கு பின்புல (BACKGROUND) நிறம் அல்லது படம் ஒன்றை போடுவது எப்படி என பார்ப்போம்.


பின்புல நிறம் ஒன்றை போடுவதற்கு <BODY> எனும் ஒட்டில் BGCOLOR எனும் பண்புக்கூற்றை சேர்த்து அதற்கு உங்களுக்கு வேண்டிய நிறத்தை தட்டச்சு செய்யவும். அல்லது உங்களுக்கு தேவையான நிறத்தின் பதின்அறும எண் (HEXADECIMAL NUMBER) இனை தட்டச்சு செய்யவும். உங்களுக்குத் தேவையான நிறத்தின் பதின்அறும எண் (HEXADECIMAL NUMBER) தெரியா விடின் http://cloford.com/resources/colours/500col.htm எனும் இணையத் தளத்திற்குச் சென்று 500க்கும் மேற்பட்ட நிறங்களின் பதின்அறும என் (HEXADECIMAL NUMBER) இணைப் பெறலாம். இவ்வாறு மஞ்சல் நிறமாக்கப்பட்ட இணையப் பக்கத்தின் குறிமுறையும் (படம்-05) பதின்அறும எண் இனால் மாற்றப்பட்ட, (படம்-06 எழுத்தினால் மாற்றப்பட்டது) இணையப் பக்கத்தையும் (படம்-07-இரு படங்களுக்கும் பொதுவான பக்கம்) கீழே காணலாம்.

```
<html>
<head>
<title>THE INTERNET</title>
</head>
<body bgcolor="#FFFF00">
<h1><center>THE INTERNET</center></h1>
<p><font color="red">
The Internet is one of the largest network of computers that connect
to each other in millions or trillions with the help of pheripheral
devices such as the modem and the network card.
</font></p>
The Internet connection comes through the telephone line as in the
classical days and as the case now it comes in wireless.
<br>
<img border="1" src="internet_001.jpg" width="100" height="100"
align="left" >
<br>
Nobody knows exactly how many computers are connected to the
Internet but a rough calculation says it is around 20trillion
commputers.
</body>
</html>
```

படம் 5

```
<html>
<head>
<title>THE INTERNET</title>
</head>
<body bgcolor="yellow">
<h1><center>THE INTERNET</center></h1>
<p><font color="red">
The Internet is one of the largest network of computers that connect
to each other in millions or trillions with the help of pheripheral
devices such as the modem and the network card.
</font></p>
The Internet connection comes through the telephone line as in the
classical days and as the case now it comes in wireless.
<br>
<img border="1" src="internet_001.jpg" width="100" height="100"
align="left" >
<br>
Nobody knows exactly how many computers are connected to the
Internet but a rough calculation says it is around 20trillion
commputers.
</body>
</html>
```

படம் 6





படம் 7

இப்போது நாம் பின்புலத்திற்கு ஓர் படத்தை சேர்ப்பது எவ்வாறு எனப் பார்ப்போம். முன்பு போலே <BODY> எனும் ஒட்டில் இம்முறை BACKGROUND எனும் பண்புக்கூற்றை சேர்த்து நிழற்படம் சேர்ப்பதற்கு செய்தவாறே படத்தின் பெயரையும் கோப்பு வகைப் பெயரையும் தட்டச்சு செய்யவேண்டும். இவ்வாறு செய்யப்பட்ட இணையப் பக்கத்தின் குறிமுறையும் (படம்-08) இணையப் பக்கத்தையும் (படம்-09) கீழே காணலாம்.

```
<html>
<head>
<title>THE INTERNET</title>
</head>
<body BACKGROUND="back_1.gif">
<h1><center>THE INTERNET</center></h1>
<p><font color="red">
The Internet is one of the largest network of computers that connect
to each other in millions or trillions with the help of pheripheral
devices such as the modem and the network card.
</font></p>
The Internet connection comes through the telephone line as in the
classical days and as the case now it comes in wireless.
<br>
<img border="1" src="internet_001.jpg" width="100" height="100"
align="left" >
<br>
Nobody knows exactly how many computers are connected to the
Internet but a rough calculation says it is around 20trillion
commputers.
</body>
</html>
```

படம் 8




படம் 9

இது போன்று மேலும் பல விடயங்களை அடுத்த இதழில் பார்ப்போம். ■

## உங்களுக்கும் சந்தர்ப்பம்!

கணினி, தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக நீங்களறிந்த விடயங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள உங்களுக்கு ஆர்வமுள்ளதா? அப்படியாயின், அவை தொடர்பான ஆக்கங்கள், துணுக்குகள், நகைச்சுவைகள், சிறு குறிப்புகள் என அமையும் விடயங்களை நீங்கள் தமிழ் PC TIMES சஞ்சிகையின் ஆசிரியர் குழாமின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கலாம். உங்கள் தரமான ஆக்கங்கள் சஞ்சிகையில் இடம் பிடிக்கும். ஆக்கங்களை எழுதியனுப்பும்போது உங்கள் முழுப் பெயர், முகவரி, தொடர்பு இலக்கம் (இருப்பின்) ஆகியவற்றினை தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவேண்டும். கையெழுத்திலோ, தட்டச்சு செய்தோ அனுப்புவதாயின் A4 தாளின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ஆக்கங்களை எழுதுதல் அவசியமாகும். ஆக்கங்கள் குறித்த விடயம் சார்பாக தெளிவாக விபரிப்பனவாக அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. ஆக்கங்களை எழுதியனுப்ப வேண்டிய எமது முகவரி: *Tamil PC Times, Wijeya Newspapers Limited, No. 08, Hunupitiya Cross Road, Colombo -02.* அத்துடன் எமது pctimes@wijeya.lk எனப்படுகின்ற மின்னஞ்சல் முகவரிக்கும் உங்களது ஆக்கங்களை அனுப்பி வைக்கலாம். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நிழற்படங்களில் எண்ணிலடங்கா மாற்றங்களைச் செய்து நேர்த்தியான நிழற்படங்களை வருவிளைவாகப் பெற்றுக்கொள்ள பொருத்தமான மென்பொருள் இதுவாகும். இதில் காணப்படுகின்ற மென்கருவிகளை உபயோகித்து எமது சிந்தனைக்கு எட்டுவதையெல்லாம் செதுக்கி விடலாம்.

Adobe Photoshop

# மழை பொழியும் காட்சி - RAINING EFFECT

*M.I.M. நப்லி*

Photoshop எனும் Application Software மூலம் செய்யக் கூடிய பல புதுமைகளை எளிமையான முறையில் சென்ற இதழ்களில் கற்றுள்ளீர்கள். இவ்விதழில் ஏதாவது ஒரு Image இற்கு மழை பொழியும் காட்சியை வழங்குவது Raining Effect கொடுப்பது எப்படி என ஆராய்வோம். Photoshop புதுமைகளில் இதுவும் ஒன்று.


நீங்கள் Raining Effect வழங்கப் போகும் Photo இனை File →Open As இன் மூலம் psd file ஆக open செய்து கொள்ளல் வேண்டும் (படம் -01).



படம் - 01

**Step 01**

நீங்கள் Open செய்த Image இற்கு புதிய Layer ஒன்றை முதலில் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும் (படம் - 02).




படம் - 02

புதிய Layer ஐ உருவாக்க இங்கே கிளிக் செய்யவும்.

**Step 02**

புதிதாக add செய்த layer இனை select செய்து Menu bar இல் Filter→Render →Clouds இனை தெரிவு செய்யுங்கள்.

**Step 03**

அதே Layer இனை திரும்பவும் Select செய்து அதற்கு, Menu bar இல் உள்ள Filter→Noise→Add Noice என்பதை தெரிவு செய்யுங்கள்.

**Step 04**

Filter →Noise→Add Noice என்பதை தெரிவு செய்வதன் மூலம் கிடைக்கும் Dialog box இல் Amount என்பதற்கு நேரே 60% எனவும் Distribution எனும் பகுதியில் Gaussian என்பதையும் தெரிவு செய்து கொள்ளுங்கள்.


**Step 05**

Filter→Blur→Motion Blur என்பதை தெரிவு செய்வதன் மூலம் கிடைக்கும் Dialog box இல் Angle என்பதற்கு நேரே 70° ஐயும் Dustance என்பதற்கு நேரே 10 Pixels எனவும் Type செய்து ok செய்யுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Step 06**

பின்பு உங்கள் Image தெரிவதற்காக புதிதாக உட்புகுத்திய Layer இன் Opacity இனை 63 ஆக மாற்றிக் கொள்ளவும் (படம் - 03).



படம் - 03



படம் - 04

**Step 07**

Image இன் Quality இனை அதிகரித்துக் கொள்ளுவதற்காக கடைசிப் படிமுறையாக கீழ் காட்டப்பட்டுள்ள Option இனை தெரிவு செய்யுங்கள் (படம் - 04).


படம் - 05




இந்தப் படிமுறைகளை செவ்வனே செய்யும் போது, (படம்-05) இல் காட்டியது போன்று உங்கள் நிழற்படத்திலும் மழைபொழியும் நிலை உருவாகும். நீங்கள் பொருத்தமான நிழற்படத்தை வழங்கி மழை பொழியச் செய்து பார்க்கலாமே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நவீன தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான அறிவை மாணவர்களுக்கு வழங்கும் பொருட்டு பாடசாலைகளில் கற்பிக்கப்படும் பாடவிதானமே இதுவாகும். இப் பாடவிதானத்தில் உள்ள விடயங்கள் மாணவர்களுக்கு மட்டுமன்றி அனைத்து தரப்பினருக்கும் மிகவும் பிரயோசனமானதாகும்.

GIT


# பொதுத் தகவல் தொழில்நுட்பவியல்
# General Information Technology

*Tharique*

கடந்த இதழில் கணினியின் மைய முறைவழி அலகின் வெவ்வேறுபட்ட பகுதிகளைப் பற்றி அறிந்துக் கொண்டோம். இவ்விதழிலும் மைய முறைவழி அலகின் செயற்பாடுகளை சாத்தியமாக்கும் இன்னும் பல பகுதிகளைப்பற்றி அறிந்துக்கொள்வோம்.

### Peripheral Devices
### புறவட்டச் சாதனங்கள்

- Peripheral devices are the components of the computer which are situated outside the main casing of the computer. Peripheral devices are typically connected to the computer by using ports.
- கணினியின் வெளியே இணைக்கப்பட்டுள்ள சாதனங்களே புறவட்டச் சாதனங்கள் என இனங்காணப்படும். இவ்வகைச் சாதனங்கள் "துறை" எனப்படும் செருகிகள் மூலம் கணினியோடு இணைக்கப்படும்.




கணினியொன்றின் செயற்பாட்டை விளக்கும் வரிப்படம்

மேற்படி வரைபடத்தில் காணப்படும் தொழிற்பாடுகளை செய்யும் பொருட்டு கணினியில் பல்வேறு பாகங்கள் காணப்படவேண்டியது அவசியமாகிறது. பொதுமைப்பாடான கணினியொன்றின் நிழற்படத்தையே குறித்த சாதனங்களின் பெயர்களோடு கீழே காண்கிறீர்கள்.




### Different Types of Ports
### பல்வேறுபட்ட 'துறை'களின் வகைகள்

#### Serial Port
#### தொடர்நிலைத் துறை

- A serial port is used to connect external modems or an older computer mouse to the computer.
- வெளியான மோடெம்கள் மற்றும் பழைய கணினி சுட்டிகளை கணினிகளோடு இணைப்பதற்கே தொடர்நிலைத் துறை பயன்படுத்தப்படுகின்றது.
- There are two serial port versions: 9-pin version, or 25-pin version. The typical data transfer rate over a serial port is 115 kilobits per second.
- 9 முனை மற்றும் 25 முனை ஆகிய இரு மாதிரியான தொடர்நிலைத் துறைகள் காணப்படுகின்றன. பொதுவாக தொடர்நிலைத் துறையொன்றினூடான தரவு பரிமாற்ற வீதம் செக்கனுக்கு 115 கிலோ பைட் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### Video Card Port
**ஒளித்தோற்ற அட்டை துறை**

- This connector is used to connect a computer display monitor to a computer's video card. It has 15 holes.
- இந்த வகையான துறை மூலமே கணினியின் ஒளித்தோற்ற அட்டைக்கு காட்சித் திரைகள் இணைக்கப்படுகின்றன. இது 15 துளைகளைக் கொண்டுள்ளது.

### Parallel Port
**சமாந்தரத் துறை**

- A Parallel port has 25 holes and is commonly known as the printer port. They are used to connect external devices such as scanners and printers.
- சமாந்தர துறைகள் 25 துளைகளைக் கொண்டுள்ளதோடு, அச்சுப்பொறி துறையென்றே பொதுவாக இனங்காணப்படும். இவை வருடிகள் மற்றும் அச்சுப்பொறிகளை கணினியோடு இணைக்கவே பயன்படுத்தப்படுகின்றன.

### PS/2 Port
**PS/2 துறை**


- A PS/2 port, also referred to as a mouse port, is used to connect a mouse or keyboard with the computer. Most computers come with two PS/2 ports, one for the keyboard and the other for the mouse.
- கணினிக்கு விசைப்பலகை மற்றும் சுட்டியை இணைக்கவே பீ எஸ் 2 துறைகள் பயன்படுகின்றன. இவை சுட்டித் துறை எனவும் வழங்கப்படும். விசைப்பலகை, சுட்டி ஆகியவற்றினை இணைக்கும் பொருட்டு அநேக கணினிகள் இரண்டு பீ எஸ் 2 துறைகளைக் கொண்ட நிலையிலேயே உருவாக்கப்படுகின்றன.

### USB Port
**யூ எஸ் பீ துறை**


- A universal serial bus (USB) port is a fairly new port - introduced around 1997. This port can be used to connect all kinds of external devices, such as external hard drives, printers and mice, scanners.
- இது 1997ஆம் ஆண்டளவில் அறிமுகம் செய்யப்பட்ட புதிய வகை துறையாகும். புற வன்தட்டு, அச்சுப்பொறி, சுட்டி, வருடி என விரியும் சகல புறச்சாதனங்களையும் கணினியுடன் இணைக்க பாவிக்கப்படுகின்றது.
- USB-compliant devices can draw power from a USB port. USB 2.0 connectors were introduced in 2003 and are capable of transferring data at 480 Mbps.
- USB மூலம் இயங்கும் தகவுடைய சாதனங்கள் USB துறையின் மூலம் அதற்கு தேவையான மின்வலுவினைப் பெறுகின்றன. 2003 இல் அறிமுகப்படுத்தப்பட்ட USB 2.0 ஆனது செக்கனுக்கு 480 மெகா பிட்டுகள் தரவினை பரிமாற்றும் தகவுநிலையைக் கொண்டதாகும்.

### Ethernet (Network) Port
**அண்மை வலை (வலையமைப்பு) துறை**

- This port is used to connect the computer to a network or to Internet. Data travels through this port depending on the speed of the network card in the computer.
- கணினியொன்றினை இணையத்திற்கு அல்லது வலையமைப்பிற்கு இணைக்கும் பொருட்டு இந்தத்துறை பயன்படுத்தப்படும். இந்தத் துறையூடாக தரவுகள் கடத்தப்படும் வேகமானது, கணினியிலுள்ள அண்மை வலை (வலையமைப்பு) அட்டையின் வேகத்திலேயே தங்கியுள்ளது.




கணினியின் System Unit இல் காணப்படும் வெவ்வேறு வகையான Portகளை குறித்துக் காட்டும் வரிப்படம்.




கணினித் தொகுதியொன்றில் USB, மற்றும் FireWire ஆகிய Ports காணப்படும் இடங்களில் குறிக்கப்பட்டுள்ள குறியீட்டினையும், குறித்த Portகளின் அமைப்பையும் குறித்துக் காட்டும் வரிப்படம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியின் எல்லாத் தளமேடைகளிலும் இயங்கக் கூடியவகையில் அமைந்த மென்பொருள்களை உருவாக்க மிகச் சிறந்த கணினிமொழி ஜாவா ஆகும். இம் மொழி தொடர்பான அறிவைப் பெற்றிருத்தல் கணினி, இணைய நிலைகளில் செயற்படக்கூடிய வினைத்திறனான மென்பொருள்களை உண்டாக்கும் திறனை வளர்க்கும்.

# கணினி மொழியின் அரசன் JAVA


*M.L.M. இர்ஷாட்*

கடந்த இதழில் பெற்றுக்கொண்ட for loop ஐ மீண்டும் விரைவாக மீட்டிக்கொள்ள பினவரும் code இனை டைப் செய்யுங்கள்

```
public class QuickReview
{
        public static void main (String arg[])
        {
            int        sum=0;
                       for(int i=0;i<10;i++)
                       {
                                  sum=sum+i;
                                  System.out.println(sum);
                       }
        }
}
```

மேலேயுள்ள செய்நிரலானது 0 தொடக்கம் 9 வரையுள்ள முழுவெண்களின் கூட்டுத்தெகையை வெளிப்படத்துகிறது.

**out put**




**while loop**

செய்நிரலில் ஒரே விடயத்தை (statement) பல தடவைகள் செய்யவேண்டியேற்படும் சமயத்திலும் சரியாக முடிவுப்புள்ளியை தீர்மானிக்க முடியாமலிருக்கும் சந்தர்ப்பங்களிலும் while Loop ஐ பிரயோகிக்க முடியும். WhileLoop ஐ உருவாக்குவதற்கான கட்டமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது

```
while (condition)
{
// Body Statement
}
```


உதாரணமாக

```
int count =1;
while (count<=3)
{
  System.out.println ("PC Times");
   count = count+1;
}
```

While loop பற்றி மிக முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டிய விடயம் அதன் தொழிற்பாடாகும். அதாவது நிபந்தனை பகுதியினது முதலாவது நிபந்தனை பொய்யாயின் ஒருபோதும் தொழிற்படமாட்டாது என்பதை நினைவில்கொள்ளவும். நிபந்தனை உண்மையாயின் while loop இன் உடற்பகுதியின் முதலாவது statement டிலிருந்து நிறைவேற்ற ஆரம்பிக்கும்.

இவ்வாறு நிபந்தனை பொய்யாகும் வரை நடைபெறும்.

**while loop இன் தொழிற்பாடு**




While loop இன் தொழிற்பாட்டை மேலும் தெளிவாக விளங்கிக்கொள்வதற்கு கீழேயுள்ள code னை run செய்யவும்


```
public class Fourth
{    public static void main (String [] arg)
        {
                 int count=1;
                 int sum=0;
                 while(count<5)
                 {
                           sum= sum+count;
```



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

```
            System.out.println(sum);
                     count= count+1;
         }
      }
   }
```

**Output**




**do - while loop**

நிபந்தனையை சோதிக்கமுன் உடற்பகுதி செயற்பட வேண்டுமாயின் do – while loop பயன்படுத்தப்படும். Do – while loop ஆனது மிக குறைந்தளவிலேயே பயன்படுத்தப்படுகிறது.

```
do
{
// Body Statement
}
while (condition);
```

உதாரணத்திற்கு

```
do
        {
        System.out.println("Reserve 1");
        System.out.println("Check Amount 2");
        System.out.println("Exit 0");
        System.out.println("Choose the Option");

    } while(option!=0);
```

இங்கு தெரிவு செய்யப்படும் option ஆனது 0 சமனாகும்போது loop ஆனது வெளியேறும்.

**if Statement**

நிபந்தனை உண்மையாயின் (true) தன்னுள்ளே(கை) வரையறுக்கப்பட்ட கட்டளைகளை நிறைவேற்றும். பொய் (false)யாயின் else பகுதியின் கட்டளைகளை நிறைவேற்றும்

```
1)   if(boolean condition)
     // single body statement

2)   if(boolean condition)
     {   // body statement }

     else
     { //body statment}
     }
```

பின்வரும் code னை டைப் செய்யவும்

```
import javax.swing.JOptionPane;
public class Fifth
{ static int option;
        public static void main (String [] arg)
        {

            String result;

            result=  JOptionPane.showInputDialog("Enter
            your marks");
            int resultvalue= Integer.parseInt( result );
            if(resultvalue>=75)

            JOptionPane.showMessageDialog(null,"Result
            is : A");

            else if(resultvalue>=60)


                JOptionPane.showMessageDialog(n
                ull,"Result is: B ");
                else if(resultvalue>=40)


                JOptionPane.showMessageDialog
                (null,"Result is : C");

        else

        JOptionPane.showMessageDialog(null,"Result is :F");
        }
}
```

**Output**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் அன்றாடம் கணினியை பாவிக்கும் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள், எழுகின்ற சந்தேகங்கள் போன்றவற்றிற்கு தெளிவான மற்றும் விளக்கமான பதில்கள் இப்பகுதியில் வழங்கப்படும். இங்குள்ள விடயங்கள் பலருக்குமுள்ள சந்தேகங்களை நிவர்த்திக்கும் என்பதில் ஐயமில்லை.

HELP DESK

# உங்கள் கேள்விகள் எங்கள் பதில்கள்

பதிலளித்தவர்: த.தவரூபன்

## விரைவாக Boot செய்ய என்ன வழி?

**Q :** எனது கணனி Pentium -04. வாங்கி இரண்டு வருடங்களாகின்றன. தற்போது அது மிகவும் வேகம் குறைவாக வேலைசெய்கிறது. Windows XP என்று தோன்றி அது Boot பண்ண அதிக நேரம் எடுக்கிறது. எனது நண்பர்கள் இதற்கு காரணம் Processor தான் என்றும், அதை மாற்றினால் விரைவாக வேலை செய்யும் என்கின்றனர். எனது கணினியை Format செய்தும் சரிவரவில்லை. 512 MB RAM போட்டால் சரியாகும் என்று சொல்கிறார்கள். இதற்கு தக்க தீர்வை தருக. எனது Processor – 2.8 GHz, Ram – 256 MB. Processor மாற்ற வேண்டுமானால் எந்த வகை Processor நல்லது? அதன் விலை என்பவற்றையும் குறிப்பிடவும்.

மகேஸ்
மட்டக்களப்பு


**A :** நீங்கள் தந்த தரவுகளின்படி உங்கள் கணினி உயர்ந்த தரத்தையே கொண்டிருக்கிறது.கணினி வேகம் குறைந்திருப்ப தற்கு Processor மட்டும் காரணமாயிருக்கமுடியாது. மேலும் Processor இன் வேகம் குறிப்பிடத்தக்க அளவு உயர்வாகவே உள்ளது. 512 MB RAM போட்டால் நிச்சயம் கணினியின் வேகம் அதிகரிக்கும். இரண்டு வருடங்கள் என்று கூறுகிறீர்கள் உங்கள் "Hard Disk"இல் கூட பிரச்சனைகள் இருக்கக்கூடும். ஒன்றை மனதில் கொள்ளவேண்டும். வெறுமனே ஒரு பாகத்தை மாத்திரம் உயர்வாக்குவதன் மூலம் கணினி வேகத்தை அதிகரிக்கமுடியாது. அதனுடன் இணைந்த மற்றயவற்றையும் உயர்த்த வேண்டும். மேற்குறித்த தரவுகளின்படி புரோசசர் வேகத்தது்க்கு ஏற்ற வகை யில் RAM இனது அளவு குறிப்பிடும்படியாக இல்லை என்றே சொல்லவேண்டும். மேலும் நீங்கள் உங்கள் கணினியை முற்றாக கழற்றி ஒரு சுத்திகரிப்பு செய்து முடிந்தால் "Hard Disk" இனை முற்றாக மீள் பிரிப்பு செய்து இயங்குதளத்தை மீள நிறுவுங்கள். Processor இனை மாற்றவேண்டிய தேவை இருக்காது.

## கணினியின் வேகத்தை அறிதல்
## Video File ஐ Screen Server ஆக அமைத்தல்

**Q :** பொதுவாக கணினியின் வேகத்தை Software மூலம் எவ்வாறு அறியலாம்? Screensaver இற்குப் பதிலாக எப்படி Hard Video க்களை போடலாம்?

M.F.M. அப்ரத் பாயிஸ்
பேருவளை

**A :** கணினியின் வேகம் என பொதுவாக குறிப்பிடுவது "Processor" இனது வேகத்தைத்தான். இதனை இலகுவாக இருவழிகளில் பார்வையிடலாம். ஒன்று My Computer இனை வலது கிளிக் செய்து பெறப்படும் மெனுவில் Properties என்பதை கிளிக் செய்வதால் தோன்றுகின்ற சாளரத்தில் பார்வையிடலாம். அல்லது Start மெனுவில் Run பகுதியில் dxdiag என தட்டச்சு செய்து Ok பட்டனை அழுத்துவதன் மூலம் இயக்கப்படும் மென்பொருள் மூலம் கணினியின் சகல விபரங்களையும் பார்வையிடலாம். இதைவிடவும் பல வழிகள் உள்ளன. இது போதும் என கருதுகிறேன். உங்களின் அடுத்த கேள்விக்கான பதில் Screensaver இற்குப் பதிலாக Video க்களை போடமுடியாது என்பதேயாகும்.




## கணினியை Format செய்தல்

**Q :** கணினியை Format செய்வது என்றால் என்ன? Floppy Disk ஐ Format செய்வது என்றால் என்ன? ஏன் Format செய்யவேண்டும்?

T.சசிகரன்
வத்தேகம.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***A :*** கணினியை Format செய்வது என்பதன்மூலம் கருதப்படுவது கணினியின் சேமிப்பகமாக தொழில்படுகின்ற Hard Disk ஐ (வன்தட்டு) பகுதியாகவோ அன்றி முற்றாகவோ அழித்து புதிதாக இயங்குதளத்தையும் மற்றய மென்பொருட்களையும் நிறுவுதல் ஆகும். இவ்வாறே Floppy ஐ முற்றாக அழித்து சீராக்கம் செய்வதை Floppy Diskette Formating எனலாம்.

ஏன் சேமிப்பான்களை Re Format (மறு சீராக்கம்) செய்யவேண்டும் என நீங்கள் கேட்பது பயனுள்ள கேள்வி. இங்கு சீராக்கம் என்பது சேமிப்பு ஊடகத்தினை சேமிப்பதற்கும் அதில்இருந்து வாசிப்பதற்கும் ஏற்றவகையில் தயார்ப்படுத்தல் என்று பொருள்படும். சீராக்கத்தின்போது இயங்குதளம் (Dos, Windows போன்றவை) குறித்த சேமிப்பு ஊடகத்தினை அழித்து அதனது சிறுபிரிப்புக்களை (செக்ரர்) பரிசோதித்து பழுதடைந்த பிரிப்புக்களை அறிந்து அவற்றை ஒதுக்கி மீள உபயோகிக்கப்படக்கூடிய பகுதிகளை இனங்கண்டு குறிப்பெடுத்து வைக்கிறது. உண்மையில் மீள்சீராக்கம் செய்யப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அனைத்து தரவுகளும் அழிக்கப்படுவதில்லை. சேமிக்கப்பட்ட பகுதிகளின் முகவரி அட்டவணைகளே அழிக்கப்படுகின்றன. ஒரு கணினி வல்லுனரால் தவறுதலாக மீள்சீராக்கம் செய்யப்பட்ட ஊடகத்தில் இருந்து தரவுகளை மீட்டெடுக்கவும் முடியும். ஆயினும் இவ்வாறு மீட்டெடுப்பதற்கு குறித்த ஊடகம் உயர் தர சீராக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். குறைந்த தர சீரக்கம் செய்யப்பட்ட சேமிப்பு ஊடகத்தில் இருந்து தரவுகளை மீட்டெடுக்க முடியாது

## இசைப்பாடலிலிருந்து இசையை வேறாக்கல்

***Q :*** ஒரு பாட்டிலுள்ள Music ஐ நீக்கி விட்டு பாட்டை மட்டும் வேறாக்குவதற்கு என்ன செய்ய வேண்டும்?

M.Z. முஹமட்
அக்ரனை.




***A :*** இவ்வாறான வேலைகளை செய்வதற்கென மென்பொருட்கள் இருக்கின்றன. இவற்றை Music Morpher என அழைகிறார்கள். இதன்மூலம் இசைப்பாட்டொன்றில் உள்ள பாட்டையும் இசையினையும் வேறுவேறாகப் பிரிக்கமுடியும். உதாரணமாக Music Morpher Gold 3.0 என்ற மென்பொருளை குறிப்பிடலாம். இவ்வாறான மென்பொருட்களை சாதாரணமாக கடைகளில் பெற்றுக்கொள்வது கடினம். ஒருசிலரிடம் இருக்கும். இவர்கள் கூடிய பணம்கொடுத்து இணையத்தின் மூலமோ அன்றி வேறுவகையிலோ வாங்கி இருப்பார்கள். உதாரணமாக கூறப்பட்ட மேற்படி மென்பொருள் சம்பந்தமான மேலதிக தகவல்களை www.musicmorpher.com என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம் அதனை அங்கே வாங்கிக்கொள்ளவும் முடியும்.

## இணைய முகவரியின் அர்த்தம் என்ன?

***Q :*** இணையத்தள முகவரிகள் சுட்டி நிற்கும் பொருள் என்ன?

***A :*** ஒரு இணையத்தள முகவரி எவ்வாறு அமையும் என்பதைப் பார்ப்போம். http://www.yahoo.com. இதில், http என்பது Hyper Text Transfer Protocol. என்பதை குறிக்கும். அடுத்து www என்பது World Wide Web என்பதைச் சுட்டி நிற்கும்.

அடுத்துள்ள yahoo.com என்பது Domain Name. அதாவது இணையத்தள முகவரி. டொமைன் நேமில் பல வகைகளுண்டு. டொமைன் நேமிலுள்ள இறுதிச்சொல் இணையத்தளம் என்ன நோக்கத்துடன் உருவாக்கப்படுகிறத என்பதை வைத்தே தீர்மானிக்கப்படும்.

உதாரணமாக, அது ஒரு அரசசார்பற்ற நிறுவனம் தொடர்பான தளமாயின் .org என்பதைப் பாவிக்கலாம். இணையத்தள முகவரிக்கு பின்னாலுள்ள சில சொற்களுக்கான அர்த்தங்களைப் பார்ப்போம்.

yahoo.com என்பதிலுள்ள .com என்பது commercial என்பதைக் குறிக்கும். அதாவது யாகூ நிறுவனம் வியாபாரத்தை மையமாகக் கொண்டு இயங்குகிறது. இதேபோல் ஏனைய பதங்களுக்கான பொதுவான விளக்கம் வருமாறு:

- **.net** - இது Internet Service provider அதாவது ISP தளமாகும்.
- **.org** - Organization (non profit) அரசசார்பற்ற அல்லது சேவை நலன் கருதி செயற்படும் நிறுவனங்கள் பொதுவாகப் பயன்படுத்தும் பதம்.
- **.edu** - கல்வி சம்பந்தப்பட்ட தளமாகும்.
- **.mil** - இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட இணையத்தளமாகும்.
- **.lk** - இலங்கை சம்பந்தப்பட்ட தளமாகவோ அல்லது இலங்கையிலுள்ள நிறுவனமாகவோ இருக்கலாம். இவ்வகை முகவரியை இலங்கையில் மொறட்டுவை பல்கலைக்கழகத்திலுள்ள கணினிப் பிரிவில் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.
- **.ca** - கனடா இணையத்தளமாகும்.
- **.gov** - அரசிற்குரிய இணையமாகும்.

Help Desk பகுதிக்கு கேள்விகளை அனுப்பும் வாசகர்கள் தங்களது கேள்விகளை போதுமான விபரங்களுடன் எழுதியனுப்பவும். பிரசுரத்திற்கு ஏற்ற வகையில் சுருக்கி எழுதி அனுப்ப வேண்டாம். கேள்விகளை ஆசிரியர் சுருக்கி பிரசுரிப்பார். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி : Help Desk, Tamil PC TIMES Magazine, Wijeya Newspapers Ltd., No.08, Hunupitiya Cross Road, Colombo - 02.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கணினி விலைச்சுட்டி

## Computer Price Index

| MONITORS | ViewSonic | Philips | Mercury | LG |
|---|---|---|---|---|
| Normal 15" | Rs.9,000 - 10,000 | Rs.9,750-10,000 | Rs.9,750-10,000 | Rs.10,750-11,500 |
| Normal 17" | Rs.13,500-15,000 | Rs.13,000-14,000 | Rs.13,000-15,000 | Rs.14,500-16,500 |
| LCD 15" | Rs.37,550-40,250 | Rs.25,000-30,000 | Rs.22,000-24,000 | MOUSE PAD |
| LCD 17" | Rs.40,000-50,000 | Rs.40,500-50,000 | Rs.32,000-34,000 | Rs.50.00 |

| RAM DDR | 128MB | 256 MB | 128MB Kingston | 256MB Kingston |
|---|---|---|---|---|
| | Rs.1,900-3,250 | Rs.2,900-4,000 | Rs.1,750-2,250 | Rs.2,600-3,500 |

| HARD DISK (Maxtor) | 40GB(7200rpm) | 80GB(7200rpm) | 120 GB | 200GB(7200rpm) |
|---|---|---|---|---|
| | Rs.5,500-6,000 | Rs.6,000-6,500 | Rs.8,000-9,000 | Rs.12000 -13,000 |

| SOUND CARD | Eagle | Vibra 128 bit | Creative 5.1 live | Creative Audily |
|---|---|---|---|---|
| | Rs.950-1,800 | Rs.750-2,000 | Rs.3,500-4,000 | Rs.13,500-14,500 |

| UPS | PowerTree | Prolink 600VA | PowerTree1.2KVA | Mercury |
|---|---|---|---|---|
| | Rs.3,500-4,000 | Rs.4,000-4,500 | Rs.7,250-8,000 | Rs.3,500-8,000 |

| PRINTER | Canon (5200) | Epson (4300) | HP (3535) | LX 300+ |
|---|---|---|---|---|
| | Rs.4,500-5,750 | Rs.5,000-6,250 | Rs.5,600 | Rs.17,000-18,000 |

| SCANNERS | HP3500 | HP2400 | Mercury | DUST COVER |
|---|---|---|---|---|
| | Rs.14,000-15,000 | Rs.8,750-10,000 | Rs.5,000-5,100 | Rs.250- 350 |

| SPEAKER | Creative | Genius | OEM | Subwoofer Creative |
|---|---|---|---|---|
| | Rs.1,000-1,250 | Rs.1,250-1,500 | Rs.700-1,000 | Rs.3,000-3,500 |

| CD DRIVE (52x) | Mercury | Gigabyte | Samsung | Sony |
|---|---|---|---|---|
| | Rs.1,700-1,900 | Rs.1,800-2,500 | Rs.1,900-2,500 | Rs.1,900-3,000 |

| DVD DRIVE (16x) | Mercury | Gigabyte | Samsung | Sony |
|---|---|---|---|---|
| | Rs.3,750-4,250 | Rs.3,500-4,000 | Rs.3,750-4,000 | Rs.3,600-4,000 |

| CD WRITERS | Samsung | Mercury | Sony | Gigabyte |
|---|---|---|---|---|
| | Rs.3,600-3,750 | Rs.3,500-4,250 | Rs.3,600-4,000 | Rs.3,900-4,500 |

| DVD WRITERS | Mercury | Benn | Sony | Gigabyte |
|---|---|---|---|---|
| | Rs.7,000-7,500 | Rs.10,000-12,000 | Rs.8,000-10,000 | Rs.9,000-10,000 |

| FAX MODEM(EXT) | A2tec USB | A2tex Serial |
|---|---|---|
| | Rs.2,500-3,000 | Rs.2,000-4,000 |

| CASING | P IV | Mercury |
|---|---|---|
| | Rs.2,350-4,500 | Rs.2,850-3,500 |

| HEAD PHONE | Labtec | Benius |
|---|---|---|
| | Rs.650-1,000 | Rs.750-1,000 |

| MICROPHONE | Benius | With H.Phone |
|---|---|---|
| | Rs.350-500 | Rs.500-1,500 |

| ZIP DISKETT | 100 MB | 250 MB |
|---|---|---|
| | Rs.800-900 | Rs.1,100-1,300 |

| CAPTURE | Asus | Snazzi USB |
|---|---|---|
| | Rs.7,000-8,000 | Rs.38,000-40,000 |

| FLASH DRIVE | Kingston 256 MB | Kingston 512MB | Kingston 01GB | Kingston 02 GB |
|---|---|---|---|---|
| | Rs.2,000-2,750 | Rs.3,000-3,750 | Rs.5,000-5,750 | Rs.9,000-10,000 |

| SCREEN FILTERS | OEM 15" | OEM 17" | 3M 15" | 3M 17" |
|---|---|---|---|---|
| | Rs.250-300 | Rs.18,500-19,000 | Rs.3,750-4,250 | Rs.7,000-8,000 |

| MOTHER BOARD | PIV (Intel) | AMD G.B | AMD |
|---|---|---|---|
| | Rs.5,000-9,000 | Rs.5,000-8,000 | Rs.5,000-9,000 |

| FLOPPY DISKETT | Imation (1box) | Sony (1box) | Philiphs |
|---|---|---|---|
| | Rs.300-350 | Rs.250-300 | Rs.250-300 |

| FLOPPY DRIVE | Sony | Mercury | Panasonic |
|---|---|---|---|
| | Rs.900-1,000 | Rs.850-1,000 | Rs.800-1,000 |

| COOLING FAN | AMD | P III | P IV |
|---|---|---|---|
| | Rs.500-700 | Rs.650-750 | Rs.750-9,000 |

| PROCESSOR | 2.2GHz(Intel) | 2.8GHz(Intel) | AMD |
|---|---|---|---|
| | Rs.13,000-15,000 | Rs.18,000-20,000 | Rs.6,750-7,500 |

| TV+RADIO CARD | PixelView | PGRX | Mercury |
|---|---|---|---|
| | Rs.3,750-4,500 | Rs.3,750-4,000 | Rs.3,750-4,250 |

| INTERNET MODEM(EXT) | D-Link | A2tec (56k) | Prolink |
|---|---|---|---|
| | Rs.3,500 -4,250 | Rs.3,000-3,500 | Rs.4,500-5,000 |

| DIGITAL CAMERA | Mercury | Creative | Sony |
|---|---|---|---|
| | Rs.13,000-20,000 | Rs.25,500-30,000 | Rs.52,000-56,000 |

| BLANK CD | 06M | Imation | TDK with casing |
|---|---|---|---|
| | Rs.23.00-26.00 | Rs.30.00-35.00 | Rs.30.00-35.00 |

| KEY BOARD | Mercury | Multimedia | USB |
|---|---|---|---|
| | Rs.400 -4,000 | Rs.1,100-1,750 | Rs.650-1,000 |

| MOUSE | PS2 Normal | Mercury | Optical USB |
|---|---|---|---|
| | Rs. 250 - 350 | Rs.250-1,500 | Rs.1,100-1,500 |

| INTERNET MODEM (INTERNAL) | D-Link (56k) | A2tec (56k) | Conexant (56k) |
|---|---|---|---|
| | Rs.1,000-1,500 | Rs.700-1,000 | Rs.1,000-1,250 |

| POWER SUPPLY | Mercury | P IV (300W) |
|---|---|---|
| | Rs.1,200-1,500 | Rs.1,250-1,900 |

| WEB CAMARA | Creative | |
|---|---|---|
| | | Rs.3,500-5,000 |

| EXT.FLOPPY DRIVE | Imation | Mitsumi |
|---|---|---|
| | Rs.4,500-5,000 | Rs.6,500-7,000 |

| ZIP DRIVE (INTERNAL) | IOMega (100MB) | IOMega(250MB) |
|---|---|---|
| | Rs.6,000-7,000 | Rs.9,750-15,000 |

| EXT. CD DRIVE | Asus | CD Bay |
|---|---|---|
| | Rs.8,000-9,000 | Rs.12,500-13,500 |

| FAX MODEM | Mercury | A2tec |
|---|---|---|
| | Rs.1,300-3,500 | Rs.800-1,200 |

| VGA Card | Mercury | Fine (64 MB) |
|---|---|---|
| | Rs.,4,500-7,500 | Rs.4,000-4,800 |

***Prepared by Pradeep Jayakody***

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# ஆச்சரியமூட்டும் அனுபவம்

> இக்கணினி விளையாட்டின் மூலம் நிச்சயமாக ஆச்சரியங்களைச் சந்திக்க வாய்ப்பேற்படும்.



| SYSTEM REQUIREMENTS |
|---|
| 100MHz PowerPC 601 or faster |
| 3D acceleration: Yes. RAVE/3Dfx |
| Machine Tested On: |
| Power Mac 7300/200 |
| 128 MB RAM |
| 32 X CD ROM drive |
| OS 8.5.1 |

*செல்லப் பிள்ளை*

பல ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் திருப்புமுனை வாய்ந்த யுத்தங்களின் அடிப்படையை வைத்து உருவாக்கப்பட்டுள்ள Myth-II: Soulblighter எனும் கணினி விளையாட்டானது, Myth எனப்படும் கணினி விளையாட்டின் புதிய பதிப்பாகும். Bungie நிறுவனம் தயாரித்து வெளியிட்டுள்ள இக்கணினி விளையாட்டானது, Windows, மற்றும் Mac OS பணிசெயல் முறைமைகளில் இயங்கக்கூடியது.

Balor எனும் படையணியின், தலைவர்களுள் ஒருவனான Soulbrighter எனும் படைவீரன் இலக்குகளை அடைவதற்கு துடிக்கும் நிகழ்வே, கணினி விளையாட்டாக தொகுக்கப்பட்டுள்ளது. மெய்நிகர் காட்சிகளை மிக நுணுக்கமான வகையில் ஏற்படுத்தியுள்ள இவ்விளையாட்டில், சரியான காட்சிகளை கணினித் திரையில் பெற 1024x768 எனும் அளவான பிரிதிறன் நிலை கணினியில் காணப்படவேண்டும்.

கணினி விளையாட்டில் பாவிக்கப்பட்டுள்ள ஒலிகள் கணினி விளையாட்டில் ஈடுபடுபவர்களுக்கு மெய்யான சூழலை அமைத்துத் தரும் வகையில் காணப்படுகிறது.

ஆச்சரியமான முறையில் முப்பரிமாண அசைவூட்டங்கள் (3D Animation) அமைக்கப்பட்டுள்ளன. இரவு மற்றும் பகல் காட்சிகள் யாவும் வித்தியாசமான முறையில் காட்சிப்படுத்தப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கணினியின் செயற்றிறனில் ஆதிக்கம் செலுத்தும் Mother board இன் பகுதிகள்



*தாரிக் அஸீஸ்*

கடந்த இதழில் Mother board இன் அமைப்பையும், அதன் செயற்றிறனில் ஆதிக்கம் செலுத்தும் விடயங்கள் தொடர்பாகவும் அறிந்து கொண்டோம். Mother board இன் தொழிற்பாட்டில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் 4 முக்கிய பாகங்களில், Socket மற்றும் CPU என்பவைபற்றி அதில் பார்த்திருந்தோம்.

இந்த இதழில் Chipset, Bus speed மற்றும் RAM ஆகிய காரணிகள் பற்றியும் அவை கணினியின் செயற்றிறனில் ஆதிக்கம் செலுத்துவதைப் பற்றியும் தெளிவாக அறிந்துகொள்வோம்.




வெவ்வேறு Chipset களின் தோற்றம்

Chipset எனப்படும் பகுதியைப் பற்றி முதலில் பார்ப்போம். Microprocessor ஐ கணினியின் Mother board உடன் இணைக்கும் முக்கிய வேலையைச் செய்யும் பகுதியே Chipset ஆகும். இது North bridge மற்றும் South bridge என வழங்கப்படும் இரண்டு வகையான பாலங்களை உடையது. கணினியில் இணைக்கப்பட்டுள்ள அத்தனை பாகங்களினையும் CPU உடன் இணைக்கும் பொறுப்பு Chipset இனையே சாரும். இதிலுள்ள North bridge ஆனது, Front Side Bus(FSB) எனும் பகுதியூடாக Processor உடன் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கும்.

CPU உடன் தொடர்பாவதை வேகப் படுத்தும் நோக்கோடு, North Bridge இல், நினைவகக் கட்டுப்பாடுகளைச் செய்யும் பகுதியொன்றும் (Memory Controller) காணப்படுகின்றது. அத்தோடு, Peripheral Component Interconnect (PCI) Express மற்றும் Accelerated Graphics Port (AGP) ஆகியவற்றை, North Bridge ஆனது, நினைவகத்துடன் இணைக்கின்றது. அதுபோலவே, கணினியின் ஏனைய பாகங்களுடன் CPU ஐ இணைக்கும் செயற்பாடுகளையும் இந்த North Bridge ஏ சாத்தியப்படுத்துகின்றது.

South bridge ஆனது North bridge இன் வேகத்தைவிடக் குறைந்த வேகத்திலேயே இயங்கக்கூடியது. இதனால் CPU இன் மூலம் பரிமாறப்படும் தகவல்கள் North bridge இனை அடைந்த பின்னரே, South bridge இற்குச் செல்லும். PCI bus, USB, IDE, SATA போன்றவற்றை இணைக்கும் பணியை South bridge மேற்கொள்கிறது.

ஒரு CPU ஐத் தெரிவுசெய்வ தென்பது உண்மையில் Chipset ஐத் தெரிவு செய்வதாகவே அமைகிறது. ஏனெனில், Chipset என்பது, Mother board உடன் ஒன்றிணைக்கப்பட்ட கூறாகும். அதனை Mother board இல் இருந்து மாற்றவோ, புதியவைகளை சேர்க்கவோ முடியாது. Mother board உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், CPU களின் தன்மைகளையொத்த வகையில், அவற்றுடன் சிறப்பாக இயங்கும் முறையில் Chipset களை உருவாக்குகின்றன. Mother board இல் இணைக்கப்பட்டுள்ள CPU இன் செயற்பாடு சிறப்பாக நடக்க வேண்டுமாயின், Chipset அதனுடன் ஒத்திசைவாக தொழிற்படவேண்டியது அவசியமாகும். இதன் காரணமாகவே, Mother board இன் தொழிற்பாட்டில் நேரடியாக ஆதிக்கம் செலுத்தும் கூறாக Chipset இனங்காணப்படுகிறது.

அடுத்ததாக நாம் Bus Speed ஐப்பற்றி அறிந்துகொள்வோம். Mother board ஐ, அல்லது கணினியின் CPU ஐப்பற்றிக் கதைக்கும்போது, Bus என நாம் குறிப்பிடுவது, Mother board இலுள்ள ஒரு பகுதியை இன்னொரு பகுதியுடன் இணைக்கின்ற சிறிய சுற்றையே (Circuit) ஆகும். Bus ஆல் கையாளப்படக்கூடிய தரவுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் போது, கணினியின் வேகம் கூடும். அதாவது, தரவுகள் Bus இனூடாக பயணிக்கும் வேகம் அதிகரிக்கும்போதே, கணினியின் செயற்பாட்டு வினைத்திறன் அதிகரிக்கும்.

Bus இன் வேகமானது மெகா ஹேட்ஸ் (MHz) என்ற அலகினால் துணியப்படும். ஒரு செக்கனில் எவ்வளவு தரவுகளை பரிமாற்றம் செய்யக்கூடிய வகையில் Bus காணப்படுகின்றது என்பதையே இவ்வளவீடு சுட்டி நிற்கும். Bus கள், Mother board இன் வெவ்வேறு பகுதிகளை இணைக்கும் வேலையைச் செய்வதால், இவை Front Side Bus (FSB) எனவும் அழைக்கப்படுவதுண்டு. இதுவே, CPU இனை North bridge உடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கின்றதென முதலில் பார்த்தோம். FSB இன் வேகமானது 66MHz இலிருந்து 800MHz இற்கும் அதிகமாகக் காணப்படும். CPU ஆனது North bridge ஊடாக Memory Controller எனும் நினைவகக் கட்டுப்பாட்டு பகுதியை அடைவதால், FSB இன் வேகமானது கணினியின் செயற்பாட்டுத் திறனில் மிகவும் துரிதமான முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

**வெவ்வேறு வகையான Busகள்**

- Back Side Bus – CPU ஐத் துணையான தற்காலிக நினைவகத்துடன் இணைக்கும் சுற்று. Processor, இதன் வேகத்தை நிர்ணயிக்கும்.
- Memory Bus – North bridge ஐ நினைவகத்தோடு இணைக்கும் சுற்று
- IDE Bus அல்லது ATA Bus – South bridge ஐ Disk Drive களுடன் இணைக்கும் சுற்று.
- AGP Bus - வீடியோ அட்டையை (Video Card) நினைவகத்துடன் இணைக்கக்கூடிய சுற்று
- PCI Bus - PCI செருகிகளை South Bridge உடன் இணைக்கும் சுற்று.

Bus இன் வேகம் அதிகரிக்கும்போது கணினியின் செயற்பாட்டு வேகமும் கூடும். ஆனாலும், குறைந்த வேகமுடைய Processor மற்றும் Chipset ஆகியவற்றுடன் கூடிய வேகமுடைய Bus கள் ஒருபோதும் ஒத்திசைவாக்கம் அடையாது.

Mother board இன் செயற்பாட்டில் ஆதிக்கம் செலுத்தும் இன்னுமொரு கூறாக நினைவகத்தினை (Memory) குறிப்பிடலாம். இந்நினைவகம் பற்றி மிகவும் விரிவாக தமிழ் PCTIMES இன் 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இதழில் ஆராய்ந்துள்ளோம்.

இவ்வாறாக, Mother board உடன் CPU, Socket, Chipset, Bus, மற்றும் Memory ஆகியவை சிறப்பான வகையில் தொழிற்படும்போதே, கணினியின் தொழிற்பாட்டில் உயர்நிலையான செயற்பாட்டை எதிர் பார்க்கலாம். இவ்வாறான கூறுகளின் தொழிற்பாடுகளே கணினியின் வேகத்தில் நேரடியாக ஆதிக்கம் செலுத்துகின்றது. ■

## இனி அழைப்பிதழ் தேவையில்லை!

தகவல்களைச் சேமித்து வைக்க அதிகளவான கொள்ளளவுகளை இணையப் பயனர்களுக்கு இலவசமாக வழங்குவதில் முன்னிற்பது கூகிள் நிறுவனம் என்றால் மறுப்பதற்கில்லை. 2.5GB கொள்ளளவை மின்னஞ்சல்களை சேமிப்பதற்காக வழங்கும் (நாளுக்கு நாள் இக்கொள்ளளவு அதிகரித்து வருகிறது) கூகிளின் சேவை GMAIL ஆகும்.

Gmail கணக்கொன்றை உருவாக்கிக் கொள்வதற்கு, முந்தியெல்லாம் Gmail கணக்கை வைத்திருப்பவர் Invite செய்ய வேண்டும். இல்லாவிட்டால் Gmail கணக்கை உருவாக்க முடியாது. ஆனால், இனி எல்லோரும் எந்தவித Invitation உம் இல்லாமலேயே, Gmail Account ஐ உருவாக்கிக் கொள்ளலாம்.

கடந்த பெப்ரவரி 14ம் திகதி கூகிள் நிறுவனம், Gmail Account ஐ விரும்பிய எவரும் உருவாக்கிக் கொள்ளும் வகையில் திறந்து விட்டது. இதனால் Gmail தளத்தில் Sign up for Gmail எனும் இணைப்பை கிளிக் செய்வதன் மூலம் அனைவரும் Gmail Account ஐப் பெற்றுக் கொள்ளலாம். Gmail Account ஐ அனைவரும் பெற்றுக்கொள்ளும் வகையில் கூகிள் செய்தது, Gmail ஐ பயன்படுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் என நம்பலாம்.

கடந்த வருடம் உலகளவில் அதிகமாக Yahoo Mail, *msn* Hotmail ஆகியவையே பயனர்களால் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதோடு, Gmail ஐ பயன்படுத்தியோர் தொகை மிகக் குறைவாகும் என ஆதாரபூர்வமான அறிக்கையொன்று சுட்டி நிற்கிறது.

*-CZ*




## எல்லையே இல்லை!



வலைப்பதிவுகள் மூலம் உடனுக்குடன் நாட்டு நடப்புகளின் உண்மை நிலைகளை வெளிப்படுத்த பல வலைப்பதிவர்கள் பல நாடுகளிலும் தொடர்ச்சியாக முன்னிற்கிறார்கள். ஈரானின் 29 வயதான ஹமீட் மொடாஹி எனும் செய்தியாளர் தனது கணினியை உபயோகித்து மனித உரிமைகள் தொடர்பாக தனது வலைப்பதிவு ஊடாக உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். இவரின் வலைப்பதிவை ஈரானிய மக்கள் பார்க்காத வகையில் ஈரான் அரசாங்கம் அவ்வலைப் பதிவை தடைசெய்துள்ளது. ஆனாலும் இவரின் வலைப்பதிவு உலகளவில் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகிறது.

மொடாஹியும் இன்னொரு ஈரானிய செய்தியாளரும், தகவல்களை சுதந்திரமாக பெற்றுக்கொள்ளும் வகையில் தெளிவான நடவடிக்கை எடுத்தமைக்காக Reporters Without Borders (RSF) எனும் ஊடக அமைப்பினால் விருதொன்றை அண்மையில் பெற்றுக்கொண்டனர்.

"மக்கள் தமது கருத்துக்களை பரிமாறுவதற்கு புதிய ஊடகங்களை நாடுகின்றனர். இது கருத்துக்களை வெளிப்படுத்துவதை தடைசெய்யும் பட்சத்தில் வெகு தீவிரமாகவே உயர்கிறது. வலைப்பதிவு திறந்த உரையாடல்களுக்கு பொருத்தமான மற்றும் மிகச் சிறந்த ஊடகமாகும்" என மொடாஹி செய்திச் சேவையொன்றுக்கு தெரிவித்தார்.


*-CZ*

### எண்கள்

**25** சதவீதமான கையடக்கத் தொலைபேசிகள் 2008 ஆம் ஆண்டளவில் இணையத்துடன் இணைப்பினை ஏற்படுத்திக் காணப்படுமென எதிர்வுக்கூறப்படுகின்றது.

AP PHOTO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனசு உடைஞ்சு போச்சு!

## இணையத்தின் முதுகெலும்பாகவுள்ள சேவையகங்களுக்கும் (Servers) துருவிகள் நாசகார தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்

உதய தாரகை

இணையத்தை வலையமைப்பாக ஏற்படுத்தி, இணைப்புகளை சாத்தியப்படுத்தும் மிக முக்கியமான சில சேவையகங்களே உலகளவில் காணப் படுகின்றன. இவை செயலிழக்கும் பட்சத்தில், முழு இணைய இணைப்புக் கட்டமைப்புமே செயலிழந்துவிடும். இதனால், அவை மிகவும் அவதானமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

"இணையத்தின் இதயம்" என வர்ணிக்கப்படுகின்ற இவ்வகையான DNS சேவையகங்கள் (Servers), இணையத்தள முகவரிகளை, IP முகவரிகளாக மாற்றம் செய்து, கணினிகளின் மூலம் இணையப் பக்கங்களைப் பார்வையிடுவதை சாத்தியமாக்கும் தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றன. இம்மாதிரியான முக்கிய தொழிற்பாட்டைப் புரிகின்ற மூன்று சேவையகங்கள் அண்மையில் Hackers எனப்படும் துருவிகளின் நாசகார தாக்குதலுக்கு இலக்காகின. அளவுக்கதிகமான தேவையற்ற தரவு களால் இந்தச் சேவையகங்கள் திட்டமிட்டு நிரப்பப்பட்டன. இது denial-of-service தாக்குதல் என்று சொல்லப்படும்.

"இராட்டினம் ஒன்றிலே 14 கொழுத்த மனிதர்கள் ஏறி உட்கார்ந்து கொண்டால், அங்கே எதுவுமே அசைவைக் காட்டாது - இது போன்றதே denial-of-service attack ஆகும்" என Sophos எனும் பாதுகாப்பு தொடர்பாக பணிபுரியும் நிறுவன சிரேஷ்ட ஆலோசகர் Graham Cluley விளக்கமளிக் கிறார்.

இந்தத் தாக்குதலுக்குள்ளான சேவையகங்கள் மூன்றும் வெவ்வேறு நிறுவனங்களால் பராமரிக்கப்படுவன வாகும். அமெரிக்க பாதுகாப்பு திணைக் களம், ICANN எனும் இணைய பெயர் வழங்கல் தொடர்பில் செயற்படும் அமைப்பு மற்றும் Ultra DNS ஆகிய மூன்றுமே அந்நிறுவனங்களாகும்.

சேவையகமொன்றைச் செயலிழக்கச் செய்யும் நோக்கத்துடன், அதிகளவு வெள்ளமாக அதற்குத் தரவுகளை அனுப்புவதே இத்தாக்குதலின் வழிமுறை யாகும். சேவையகங்கள் தாக்குதலுக்கு உட்படும்போது, அதனுடன் சம்பந்தப் பட்ட இணையத்தளங்களைப் பார்வை யிடுவதோ, மின்னஞ்சல் அனுப்புவதோ இயலாத காரியமாகிவிடுகிறது. இணை யத்தளங்களின் முகவரிகளின் தரவுத்தள மாகவுள்ள இச்சேவையகங்கள் துருவி களின் தாக்குதலுக்கு இலக்காகும் சாத்தி யம் 85 சதவீதமாக காணப்படுவதாக கடந்த வருட ஆய்வு முடிவொன்றிலிருந்து அறியப்படுகிறது.

இத்தாக்குதலை நிகழ்த்துவதற்கு அப்பாவிகளான பயனர்களின் கணினி களை, Zombie கணினிகளாக Hackers பயன்படுத்துவதான் மிகவும் பரிதாபமான விடயமாகும்.

### Zombie என்றால்...







Hackers எனப்படும் துருவிகள் தமது கணினிகளை பாவித்து இணையத்தில் இணைப்பிலுள்ள எமது கணினியை ஆளுகை செய்கின்றனர். பின்னர் எமது கணினியிலிருந்து சேவையகங்களுக்கு நாசகார தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். எமக்குத் தெரியாமலேயே எமது கணினிகள் சேவையகங்களை தாக்குவதற்கு துருவிகளினால் பயன்படுத்தப்படுவது அபாயகரமானதாகும். இந் நிலையில் ஒன்றுமறியாத அப்பாவியான எமது கணினி, Zombie கணினியாக தொழிற்பட்டு நாசகார தாக்குதலுக்கு நேரடியாக துணைபுரிகிறது.

இணையத்தின் மனம் என்றுமே ஆரோக்கியமான சிந்தனையால் போஷிக்கப்படவேண்டுமென நினைத்தா லும், துருவிகளோ விடுவதாயில்லை. எங்கெல்லாம் புகுந்து தில்லு முல்லு செய்ய முடியுமோ, அங்கெல்லாம் மிக வேகமாகச் செயற்பட்டு வில்லங்கம் செய்யும் திறனை Hackers எனப்படும் துருவிகள் தமது கை வந்த கலையாகப் பெற்றுள்ளனர்.

AFP PHOTO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Zeezat*

# உருவாகிறது கடுகதி மீகணினி

உலகில் தற்போதைய நிலையில் மிக வேகமாக இயங்கக்கூடிய BlueGene/L எனும் கணினியும் IBM நிறுவனத்தாலேயே உருவாக்கப்பட்டது. இந்தக் கணினியை விடவும் மிக வேகமாக இயங்கக்கூடிய புதிய அதிவேக கணினியை IBM நிறுவனம் இப்போது உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. உருவாக்கப்படவுள்ள இக்கணினி 'Roadrunner' எனும் குறியீட்டுப் பெயரால் வழங்கப்படுகின்றது.

புதிதாக உருவாக்கப்படவுள்ள Roadrunner ஆனது, Super Computer களில் பாவிக்கப்படும் Processor மற்றும் Sony நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ள PlayStation 3 (PS3) எனும் சாதனத்திலுள்ள புதிய 'Cell' எனப்படும் ஒரு வகை Chip இனையும் சேர்த்துத் தயாரிக்கப்படவுள்ளது.

மெக்ஸிகோவிலுள்ள Los Alamos எனும் தேசிய ஆய்வுகூடத்திலேயே, புதிதாக உருவாக்கப்படவுள்ள இந்த மீகணினி, பயன்படுத்தப்படவுள்ளது. அமெரிக்காவின் அணுத்திரவியங்களின் ஆயுளினை கண்காணிக்கும் மிகமுக்கியமான பொறுப்பினையே இக்கணினி ஏற்கவுள்ளதாக குறித்த ஆய்வுகூடத்துக்குப் பொறுப்பாகக் கடமையாற்றும் அமெரிக்காவின் வலுத்திணைக்களம் (Department of Energy-DOE) தெரிவிக்கின்றது. அணு ரீதியான ஆய்வுகளை மேலும் வினைத்திறனாக்க இக்கணினி பெரிதும் உதவுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

Roadrunner மீகணினியின் வேகம் Petaflop மூலம் துணியப்படுகிறது. ஒரு Petaflop என்பது 1,000 Trillion கணித்தல்களை ஒரு செக்கனில் ஆற்றக்கூடிய தன்மைகொண்டதாகும். என்ன? தலை சுற்றுகிறதா?

தற்போதைய மிக வேகமான மீகணினியானது, teraflop வேகத்திலேயே இயங்குகின்றது. அதாவது செக்கனுக்கு ஒரு trillion கணித்தல்களைச் செய்கின்றது.

கலப்பு முறையில் (hybrid) தற்போது உருவாக்கப்படவுள்ள இந்த Roadrunner மீகணினியானது, மிக உச்சளவான கடுகதி வேகத்தைக் கொண்டிருக்குமென எதிர்வு கூறப்படுகின்றது. 16,000 பொதுமைப்பாடான Processorகள், மற்றும் 16,000 'Cell' Processorகள் ஆகியவற்றைக் கொண்டு தயாராகும் இக்கணினியில் பொருத்தப்படும் 'Cell' processor ஒவ்வொன்றும் எட்டு Processor களை தன்னகம்கொண்டுள்ளதோடு, செக்கனுக்கு 256 பில்லியன் கணித்தல்களைச் செய்யக்கூடிய ஆற்றலை ஒவ்வொரு Cell உம் பெற்றுள்ளது. இதன் காரணமாகவே Roadrunner இன் வேகம் கடுகதியாகிறது.

> "உலகிலேயே மிக வேகமாக இயங்கும் தகவுள்ள மீகணினிகளை (Super Computer) IBM நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

Cell எனும் Processor நுணுக்கமான கணித்தல்களை சாத்தியமாக்கும் முறையில் உருவாக்கப்பெற்றுள்ளது. புரதங்களின் வடிவங்கள், உயிரியல் தொழிற்பாட்டில் எவ்வாறு தாக்கத்தினை செலுத்துகின்றது என அறிந்து கொள்வதற்குச் செய்யப்படும் The folding@home செயற்றிட்டத்திலும், Cell Processorகளே பயன்படுத்தப்படுகின்றது.

கடுகதியாக இயங்கவுள்ள Roadrunner ஆனது, தரவுகளை ஆளும் திறனை வினைத்திறனாக்க, இரண்டு பிரதான தொகுதிகளாக தரவுகளை பரிகரணம் செய்யும் வகையில் உருவாக்கப்படவுள்ளது. இதனால், வேகமான செயற்பாட்டில் விவேகமான தரவுக் கையாளுகையும் காணப்படுவது நிச்சயமாக்கப்படுகிறது.


2008 ஆம் ஆண்டில் தயாரித்து முடிக்கப்படவுள்ள Roadrunner எனும் மீகணினியானது, Los Alamos தேசிய ஆய்வுகூடத்தின், 12,000 சதுர அடி (1,100 சதுர மீட்டர்கள்) பரப்பை பிடிக்கவுள்ளது. ரொம்பவும் பெரியதுதான் இல்லையா?

கைக்கடக்கமாகச் சிறிய சிறிய சாதனங்களை உருவாக்கும் முன்னெடுப்புகள் நடக்கும் அதேவேளை, இவ்வாறான பெரிய சாதனங்களை ஆக்குவதிலும் ஆர்வம் குறையவில்லையென்றே சொல்லவேண்டும். எல்லாமே, தகவல்கள், தரவுகளை ஆளும் திறனில் மாற்றங்களை கொண்டுவருவதற்கே உருவாக்கம் பெறுகின்றதென்றால் மறுப்பதற்கில்லை. ■

## Blue Gene



Blue Gene எனும் செயற்றிட்டமானது IBM நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலமாகவே இன்றளவில் உலகிலேயே அதி வேகமாக இயங்கும் BlueGene/L எனும் மீகணினி உருவாக்கப்பட்டது. Roadrunner என்பது IBM இன் புதிய முயற்சியாகும்.



Sony நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட Play Station 3 எனும் சாதனத்தில் "Cell" Processor கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை செக்கனுக்கு 256 பில்லியன் கணித்தல்களைச் செய்யும் ஆற்றலுடையது. இதனால் புதிய முயற்சியில் இது பயன்படுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மாத மென்பொருள்

REALLUSION

# Crazy Talk

Zeezat

# எம்முடன், நாமே பேசலாம்!

**கணினிக்கு மனித இயல்புகள் மெல்ல மெல்ல வழங்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். சாதாரணமாக நாம் Type செய்த சொற்களை வாசிக்கும் மென்பொருள்கள் பல, சாதாரணமாக புழக்கத்தில் காணப்படுகின்றன.**

இம்முறை நாம் அறியவுள்ள Crazy Talk எனும் மென்பொருள் மிகவும் வித்தியாசமான பண்புகளைக் கொண்டுள்ளது. நாம் Type செய்யும் Text களை, மென்பொருளிலுள்ள சில உருவங்கள் வாயை அசைப்பதன் மூலம் கதைத்துக் காட்டும். அவ்வுருவங்களுக்கு ஏற்ப குரலும், உச்சரிப்புக்கு ஏற்ப உருவங்களின் வாயசைவும் பொருத்தமான வகையில் காட்சியாகும்.


நாம் Type செய்யும் வசனங்களை மட்டுமல்லாது, Microphone மூலம் நாம் கதைக்கும் சத்தங்களுக்கேற்பவும் தமது முக அசைவுகளைக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. இம் மென்பொருளிலே, Model என குறிப்பிடப்படும் வகையில் சில உருவங்கள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றை தெரிவு செய்து, நாம் Type செய்யும் சொற்களை அல்லது நாம் Record செய்த ஒலிகளை, அவற்றின் முகவாய் அசைவுகளின் மூலம் கேட்டுக் கொள்ளலாம்.

இவ்வாறு Output ஆக பெறப்படும் Model களின் சொற்களிற்கேற்ப காட்டப்படும் அசைவூட்டத்தை, .exe கோப்பாக மாற்றி எமது நண்பர்களிடையே பகிர்ந்து கொள்ளலாம். .exe கோப்பாக மாற்றி பகிர்வதனால், அக்கோப்பினை Open செய்ய, Crazy Talk மென்பொருள் கணினியில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

எமது நிழற்படம் அல்லது நாம் விரும்பியவரின் நிழற்படத்தை குறித்த Model இற்கு பதிலாக பிரதியிட்டு வாய், மற்றும் கண் ஆகியவற்றின் அமைவை சரிசெய்தால், நாம் வழங்கிய நிழற்படம் நிஜமாகவே கதைப்பதை இம்மென்பொருளால் சாத்தியமாக்கலாம். நமது நிழற்படங்கள், முகவசைவுகளைக் காட்டி வார்த்தைகளை உச்சரிக்கும் முறை மிகவும் சுவாரசியமாக அமையும்.

ஆங்கிலச் சொற்களின் உச்சரிப்பை மிக நுணுக்கமாகவும், மிகச் சரியாகவும், ஒலிவடிவிலும், முக அசைவிலும் காட்டுவதால், மொழியின் பாவனை தொடர்பில் பரிச்சயம் பெறுவதற்கும் இம்மென்பொருள் துணை புரியும் என்றே சொல்லலாம்.

இம் மென்பொருளை http://www.reallusion.com எனும் இணையத் தளத்திலிருந்து பதிவிறக்கிக் கொள்ள முடியும். நீங்களும் உங்கள் நிழற்படங்களை, அல்லது நீங்கள் விரும்பியவர்களின் நிழற்படங்களை வழங்கி, அவை கதைப்பது போன்ற நிகழ்வை அனுபவிக்கலாமே!




நாம் வழங்கும் ஒலியை அல்லது Type செய்யும் எழுத்துக்களை உச்சரிப்பதற்கு வெவ்வேறு நபர்களின் உருவங்களை இம்மென்பொருள் மூலம் சாத்தியமாக்கலாம். மிகப் பெரிய விஞ்ஞானி ஐன்ஸ்டைனின் உருவத்தோடு அமைந்த இடைமுகம்.



வெவ்வேறு நிழற்படங்களை முகவசைவுக் கேற்ப தொகுக்கும் இடைமுகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விரிவாக்கப்படும் கையடக்கச் சாத்தியங்கள்

*உதய தாரகை*

கையடக்கத் தொலைபேசிகளை பாவிப்பவர்கள், அவற்றின் மூலம் அதிகமதிகமான காரியங்களை செய்வதனைச் சாத்தியப்படுத்த, Barcelona இல் 3GSM நிகழ்வில் பல்லாயிரக்கணக்கில் ஒன்று கூடினார்கள்.

விரைவான மற்றும் விலையில் மலிவான தொலைபேசித் தொடர்புகளை மிக வெகுவாக வழங்கும் பொருட்டு, பெப்ரவரி மாதம் 12ம் திகதி முதல் 4 நாட்கள் தொடர்ந்து 3GSM எனும் கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பான உலகிலேயே மிகப்பெரிய ஒன்றுகூடல் நிகழ்வு Barcelona வில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் 1,300 இற்கும் அதிகமான கம்பனிகள் தமது நிறுவனங்களின் உயர் தொழில்நுட்ப வருவிளைவுகளைக் காட்சிப்படுத்தினர். இணையத் தொடர்பினை கையடக்கத் தொலைபேசியில் சாத்தியமாக்கும், தொழில்நுட்ப விடயங்கள் பற்றியே புதிய சாதனங்களின் வெளியீடுகள் அதிகம் எதிர்வு கூறின. இந்நிகழ்வில் 60,000க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

முதல் தடவையாக இந்நிகழ்வில் Yahoo, MTV, மற்றும் Warner Music ஆகிய நிறுவனங்கள் கலந்து கொண்டு, கையடக்கத் தொலைபேசிகளுக்கு Music, Video உள்ளடக்கங்களை வழங்கும் பொறிமுறையை விளக்கினார்கள்.

மிக மலிவான தொடர்பாடலையும், வேகமான இணைப்பையும் சாத்தியப் படுத்தியுள்ள WiMAX தொழில்நுட்பங்களை உள்வாங்கித் தொழிற்படும் கையடக்க சாதனங்களே இந்நிகழ்வில் அதிகமாக பார்வையிடப்பட்டுள்ளன. ■

## WiMAX பற்றி...

- Intel நிறுவனம் Motorola உடன் இணைந்து, WiMAX இன் மூலம் உயர் அடைவுகளை கொண்ட சேவையை பயனர்களுக்கு வழங்கவுள்ளது.
- தென் கொரியாவில் இத் தொழில்நுட்பம் WiBro என இனங்காணப்படுகிறது.

## எண்கள் சொல்லும்...

**45.6** மில்லியன் தடவை கையடக்கத் தொலைபேசி பயனர்கள் கையடக்கத் தொலைபேசியூடாக கடந்த மூன்று மாதத்திற்குள் இணையத்துடன் இணைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

**797.6** மில்லியன் கையடக்கத் தொலைபேசிகள் இந்த வருட இறுதிக்குள் உலகளவில் பாவனையிலிருக்குமென எதிர்வு கூறப்படுகிறது.

3GSM WORLDCONGRESS

## நிகழ்வில் கலந்துகொண்ட பிரமாண்டங்கள்



LEFT:
Microsoft இன் கையடக்கச் சாதனப்பிரிவின் உப தலைவர் Pieter Knook

CENTER:
Ericsson நிறுவனத்தின் தலைவர் Carl-Henric Svanberg

RIGHT:
Nokia நிறுவனத்தின் தலைவர் Olli-Pekka Kallasvuo

AP PHOTO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் திருமுகம்



## தொழில்நுட்ப தொலைகாட்டி

★ உலகத்தில் அறிமுகப்படுத்தப்படும் புதிய தொழிநுட்பங்கள் இலங்கையைப் போன்ற 3ம் மண்டல நாடுகளுக்கு மெய்மையாக வந்து சேர்வதற்கு பல ஆண்டுகள் எடுக்கும். ஆனால் அவைபற்றிய அத்தனை தகவல்களையும் மொத்தமாக வழங்குதலில் தமிழ் PCTIMES சஞ்சிகை எடுக்கும் முயற்சி வியக்கத்தக்கது.

2008 இல் ஆசிய நாடுகளில் பாவனைக்கு வரவிருக்கும் iPhone பற்றிய விபரங்கள் தொழில்நுட்ப மாற்ற அடைவுகளை பெற்றுக்கொள்வதற்கு எம்மை நாம் தயார்படுத்தவேண்டியதன் அவசியத்தை சுட்டிநிற்கிறது. ஆக, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயங்களில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் அறியத்தரும் தமிழ் PCTIMES ஐ ஒரு "தொழில்நுட்ப தொலைகாட்டி"யாகவே கருதமுடிகிறது.

வ.வாகீசன்,
திருகோணமலை.

## கணினியின் உயிர்நாடி

கடந்த இதழில் வெளியான Mother board அறிந்தும் அறியாமலும் என்ற தலைப்புடைய கட்டுரை மூலம் கணினியொன்றில் Mother board இன் முக்கிய பங்கு தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. கணினியின் எதிர்பாராத செயலிழப்புக்களின் போது பொது காப்பு நிலைகளை BIOS chip கள் செவ்வனே செய்வது கணினியின் உயிரோட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. Mother board இன் மூலம் கணினியோடு இணைக்கப்படும் உபசாதனங்கள் இயங்குவதை வினைத்திறனாக்கும் தலையாய கடமை Mother board இல் தங்கியிருப்பதையும் அறிய முடிந்தது.

B. சுந்தரேஸ்வரன்
வவுனியா

*சஞ்சிகையில் வெளிவரும் உள்ளடக்கங்களைப் பற்றி விபரிப்பனவாக வாசகர்கள் எழுதும் விபரமான விமர்சனங்களில் சிறந்த ஒரு வாசகர் திருமுகத்திற்கு மூன்று மாதங்களுக்கான PC Times சஞ்சிகை இலவசமாக வழங்க ப்படும்.*

*சஞ்சிகை தொடர்பான உங்கள் கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை அனுப்புகையில் பெயர், முகவரி ஆகியவற்றை தெளிவாக குறிப்பிட்டு அனுப்பவும்.*

*உங்கள் கடிதங்களை, Mail Box, Tamil PC Times, Wijeya Newspapers Ltd., No. 08, Hunupitiya Cross Road, Colombo -02. என்ற முகவரிக்கோ அல்லது pctimes@wijeya.lk என்ற எமது மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பலாம். நீங்கள் அனுப்பும் கடிதங்கள் கருத்தை வெளிப் படுத்தும் பொருட்டும் குறுகிய இடத்தைக் கருத்திற் கொண்டும் தொகுக்கப்படலாம்.*

★ என குறியிடப்பட்டுள்ள வாசகர் திருமுகத்தை அனுப்பியவர் ஏப்ரல் மாதம் முதல் மூன்று மாதங்களுக்கான தமிழ் PC TIMES சஞ்சிகையை பெறும் வெற்றியாளராகிறார்.



2 ஆவது ஆண்டில் உங்கள்

தமிழ் PCTIMES

பாராட்டுக்களையும் வாழ்த்தட்டைகளையும் அனுப்பிய தமிழ் PCTIMES இன் வாசக நெஞ்சங்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைய வெளி




## 10 நிமிடம் மட்டும்


இணையத்தில் பல சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் ஆர்வங்காட்டும் போது, அவற்றைப் பெறுவதற்கு Sign up செய்கையில் எமது மின்னஞ்சல் முகவரியை வழங்குவது கட்டாயமாகிறது. இதனால், எமது மின்னஞ்சல் பெட்டிக்கு வகைதொகையின்றி எரிதங்கள் எனப் படும் SPAM வர வாய்ப்பேற்படுகிறது. இதனைத் தடுப்பதற்காக, 10 நிமிடம் மட்டும் செயற்படும் தற்காலிகமான மின்னஞ்சல் முகவரியை தரும் ஒரு இணையத்தளமொன்று உள்ளது. இதனைப் பெறுவதற்கு எந்தவித Form உம் நிரப்பவேண்டியதில்லை. அவ் வினையத்தளத்திலுள்ள இணைப்பை கிளிக் செய்ததும் எமக்குரிய மின்னஞ்சல் முகவரி தரப்படும். 10 நிமிடங்களுக்குள் அந்த முகவரிக்கு எந்த மின்னஞ்சல் வந்தாலும் அவற்றையும் பார்க்க முடியும். ஏன் பதிலும் அனுப்ப முடியும். 10 நிமிடம் போதாதென்றால் இன்னும் 10 நிமிடம் கூட்டியும் கேட்கலாம். ஆக தற்காலிக முகவரியை உருவாக்கி இணையச் சேவைகளைப் பெறுவதால், எமக்கு SPAM தொல்லை இருக்காது. htt://10minutemail.com என்பதே இவ்விணையத்தள முகவரியாகும்.




## கூகிளில் இல்லாதது!

கூகிள் தேடற்பொறி மூலம் அனைத்தையும் தேடிப்பெறலாம் என்பது யாவரும் நம்புகின்ற ஒரு விடயமாகும். இருந்தபோதும், சில நேரங்களில் சில விடயங்களை தேடித்தருவதில் கூகிள் தேடற்பொறியிற்கும் முடியாமல் போய்விடுகிறது. கூகிளாலும் தேடிப் பெறமுடியாத விடயங்களை தொகுக்க வேண்டுமென ஒருவருக்கு ஆர்வம் ஏற்பட்டு விட, உலகலாவிய ரீதியில் மக்களின் பங்களிப்புடன் இயங்கும்படியாக இணையத்தளமொன்றை அவர் ஆரம்பித்தார். உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்து காணப்படும் அத்தனை வலையமைப்புகளிலும் கூகிள் தேடியும் கிடைக்காதவற்றை, அத் தேடலை மேற்கொண்டவர்கள் இணையத்தள மூடாக குறித்த தேடல் பற்றி மிக விபரமாக பகிர்ந்து கொள்கின்றனர். பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ள இந்த தேடல் தொடர்பான விடயங்கள் தேடல் தொடர்பான வினைத்திறனின் அவசியத்தை உணர்த்தி நிற்கின்றன.

http://www.cantfindongoogle.com என்பதே இவ்விணையத்தள முகவரியாகும்.




## இலவசமாய் நிழற்படங்கள்




பதிப்புரிமை செய்யப்பட்ட விடயங்களை பாவிப்பது, புலமைச் சொத்து தொடர்பான சட்டப்பிரச்சினைக்குள் கொண்டு செல்லும் இணையத்திலுள்ள பல நிழற்படங்கள் பதிப்புரிமை செய்யப்பட்டவையாகும். அவற்றை மீளப்பயன்படுத்துவது தடைசெய்யப் பட்டதான விடயமாகும். ஆனாலும் இணையப்பரப்பிலே பதிப்புரிமை செய்யப் படாத விடயங்களும் காணப்படுகின்றன. அதனில், பதிப்புரிமை செய்யப்படாத அனைவரும் தமது தேவைக்கும் பயன்படுத்தக்கூடிய வகையிலுள்ள Royalty Free நிழற்படங்களை, everystockphoto எனும் இணையத்தளம் வழங்குகின்றது. இவ்விணையத்தளத்தில் இருந்து எமக்குத் தேவையான நிழற்படங்களை இலவசமாகவே பெற்றுக்கொள்ளலாம். இவ்விணையத்தளத்தின் முகவரி, http://everystockphoto.com என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் PCTIMES



## கண்ணுக்குள் உன் உருவமே...

MicroOptical நிறுவனம் iPod உடன் சேர்ந்து இயங்கும் தகவுள்ள சிறிய மூக்கு கண்ணாடி வடிவிலமைந்த தொலைக்காட்சியை அறிமுகம் செய்துள்ளது. இது "Myvu" எனும் பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது. இச் சாதனத்தின் எடை மிகச் சிறியதாக இருப்பதோடு, ஒலி மற்றும் ஒளி ஆகியவற்றை மிகத் தெளிவாக வழங்கும் தன்மை கொண்டது. மிக நுண்ணிய பற்றரிகள் மூலம் இயங்கக்கூடிய இச்சாதனம் சுமார் 8 மணித்தியால வீடியோ கோப்புகளை தொடர்ச்சியாக பார்க்கக்கூடிய வாய்ப்பை உண்டாக்கியுள்ளது. இச்சாதனத்திலிருந்து iPod இற்கும் மின்சக்தி வழங்கப்படுகின்றது. Myvu வில் தொலைக்காட்சியை கண்டுகளிக்கும் பெண்ணை படத்தில் காண்கிறீர்கள்.

wijeyanewspapers

விஜய்

Printed & Published by Wijeya Newspapers Ltd., No.8, Hunupitya Cross Road, Colombo - 02.